

...C.N.அண்ணாதுரை,M.A...

1858 — 1948

183

C.N. அண்ணாதுரை. M.A

திராவிடப்பண்ணை
திருச்சிராப்பள்ளி-2

நான்காம் பதிப்பு—1975

உரிமையுடையது.

34641

விலை ரூ. 2—00

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி—8.

விசித்திர வினா !

'ஏகாதிபத்யம், இருக்கிறதா ? இறந்து விட்டதா ?'

இந்த விசித்திரமான கேள்விக்கு இன்று அவசியம் ஏற்பட்டுவிட்டது.

ஏகாதிபத்யத்தின் பிடியிலே சிக்கிச் சிதைந்து, பிறகு எழுச்சி பெற்று எதிர்த்துத் தாக்குதலை நடத்தி வந்தவர்களுக்கு இந்தச் சந்தேகம் ஏற்படவேண்டிய அவசியம் உண்டானதுகூட அவ்வளவு ஆச்சரியமில்லை ; ஏகாதிபத்யத்துக்கே இன்று அந்தச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது ! அந்தப் பகுதிதான் ஆச்சரியமிகுந்தது.

'புலி இறந்து விட்டதா, புதருக்குப் பின்புறத்தில் பதுங்கிக் கொண்டிருக்கிறதா' என்று வேட்டைக்காரன் சந்தேகப் படுவதோடு இல்லை. புலிக்கே ஏற்பட்டிருக்கிறது அந்தச் சந்தேகம்.

நான் இருக்கிறேனா, இறந்துவிட்டேனா என்று ஏகாதிபத்யமே இன்று தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறது !

வேடிக்கை இத்துடன் நின்றுவிடவில்லை. "என்னையா இவ்வளவு தைரியமாக, இந்தியாவைவிட்டு வெளியேபோ ! என்று சொல்லுகிறாய்" என்று நாலு ஆண்டுகளுக்கு முன்பு —கர்ஜித்த ஏகாதிபத்யம், இப்போது 'நான் நாள் பார்த்தாகிவிட்டது இந்தியாவை விட்டு வெளியேற" என்று தெரிவிக்கிறது.

வேடிக்கையின் முழு உருவம் வேருக இருக்கும்—‘ நான் போகிறேன் வெளியே’ என்று ஏகாதிபத்யம் கூற, ‘போகாதே வெளியே’ என்று அதன் ஆட்சியால் பாதிக்கப் பட்டவர்கள் கூற, உலகப் பஞ்சாயத்தார் பார்த்து, ‘‘என் னய்யா பாவம்! அவர்கள் அவ்வளவு தூரம் போகாதே போகாதே என்று சொல்கிறபோது, நீ, போய்த்தான் தீருவேன் என்று பிடிவாதம் பேசுகிருயே, இது தர்மமல்ல; இரு அங்கே, அவர்கள் இஷ்டப்படி’’ என்று சமாதானம் கூறவேண்டிய விதமாக நிலைமை மாறும் போலிருக்கிறது.

இவ்வளவு வேடிக்கைகளுக்கும் காரணம் என்ன? விசித் திரமான நிலைமைக்கு ஒரு விளக்கமும் கிடையாதா என்ருல், நிச்சயமாக இருக்கிறது. ஏகாதிபத்யம், அதை எதிர்க்கும் முன்னணிப் படை, இரண்டுக்கும் இருதய சுத்தமில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதும், வேளைக்கு ஏற்ற விதமாகவும் நாளைக்கு ஒரு மாதிரியாகவும் பேசுவது மாக உள்ளன—வேடிக்கையான, விசித்திரமான நிலைமைக்கு இதுவே காரணம்.

பிளாசியில் நமது பூபாகத்தைப் பிடித்து, பாஞ்சாலப் படுகொலை நடக்குமளவுக்குக் கொடிகட்டி ஆண்ட பிரிட்டி ஷார், ‘‘1948 ஜூன் மாதத்திலே நாங்கள் இந்தியாவை விட்டு வெளி ஏறுகிருேம்—இதற்குள் நீங்கள் உள்நாட்டுத் தகராறுகளை நீங்களாகத் தீர்த்துக் கொண்டால், நன்ருக இருக்கும்; இல்லையாஞல் எங்களுக்கு யுக்தமான தென்று தோன்றுகிற ஏற்பாட்டை எங்களுக்குச் சரி என்று படுகிற விதமாகச்செய்து விட்டு நாங்கள் போய்விடுவோம்’’ என்று கூறிவிட்டனர்.

அடிமைப்படுத்தப்பட்டு புரட்சிச் சக்தியைக்கொண்டு ஆதிக்கக்காரர்களை எதிர்த்துத் தமது வீரத்தைக் காட்டி உரிமையை நிலை நாட்டத் துணிந்த பிறகு, ‘விடுதலை’ அளிக் கிருேம், நாங்கள் வெளி ஏறுகிருேம், என்று ஆதிக்கம் செலுத் தினவர்கள் அறிவிக்கின்றனர். இந்த மகத்தான நிகழ்ச்சி— மட்டற்ற மகிழ்ச்சியைத் தரவேண்டிய சம்பவம்—நாடெங்

கும் வீடெங்கும்குதூகலம் ஊட்டவேண்டிய சம்பவம்—கவிகள் பாடல் புனையக் காரிகையர் அவைகளைப்பாட, காளைகள் வெற்றிமுரசு கொட்டி ஊரெல்லாம் பவனிவர, மகர தோரணங்கள் எங்கும் தோன்ற, மக்கள் அகமும் முகமும் மலர, எங்கும் களிப்பு கூத்தாட வேண்டிய சமயம்—கருகி விட இருந்த அரும்பு மலர்ந்ததுபோல் — மங்கிவிட்ட கண்கள் மீண்டும் ஒளிவிடத் தொடங்குவது போல— தேய்ந்த நிலவு திடீரென முழுமதியானது போல—சுதந்திர வாழ்வை இழந்திருந்தவர்களுக்கு, இனி விடுதலை வாழ்வு, கிடைக்க இருக்கிறது. இதோ பதினைறு மாதங்களிலே நான் போகிறேன் வெளியே — என்று பிரிட்டிஷார் அறிவித்து விட்டனர்— அப்படிப்பட்ட அருமையான, ஒரு நாட்டின் வாழ்விலே அடிக்கடி நேரிட முடியாத—மகத்தான சம்பவம் இன்று உப்புச் சப்பற்று, ஊராரின் கவனத்தை இழுக்கும் திறனுமற்று—உள்ளத்துக்கு மகிழ்ச்சியோ, நம்பிக்கையோ ஊட்டுவதாக இல்லாமல் — போய் விட்டது! பத்திரிகைகளிலே வெளிவரும் பல ஆயிரம் சேதிகளிலே இதுவும் ஒன்ருகப் போய்விட்டதே யொழிய, இன்பக்கனவு நனவாகிறது! என்ற எழுச்சிமிக்க எண்ணத்தைத் தரும் 'செய்தி' யாகக் கருதப்படக் காணேம்! அது உண்மையிலேயே, வெறும் செய்தி மட்டுமல்லவே! சரித்திரம்! வெறும் அறிவிப்பு மட்டுமல்ல, புது வாழ்வுக்கான உறுதிமொழி!

நாட்டு நிலை ஜெர்மன் ஆதிக்கத்தால் கெட்டு விட்ட போது தெகொல் பிரான்சை விட்டு பிரிட்டன் வந்தார். பின்னர் ஜெர்மன் ஆதிக்கம் கூட்டுப்படையால் தகர்க்கப்பட்டது. பிரான்சு, இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றது. பெற்ற காலை, எவ்வளவு களிப்பு! விழாவல்லவோ கொண்டாடினர்; இங்கு விழாவாக வேண்டிய சம்பவம் வெறும் விறுவிறுப்பு கூடத் தரவில்லை! மகிழ்ச்சி இல்லை என்பது மட்டுமில்லை, விசாரத்தையும் கிளறி விட்டது. ஏன்? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நிலைதான் இதற்குக் காரணம், இந்தக் குற்றம், இருசாரார்மீதும். ஒருவர்மீதுமட்டுமல்ல!

போய் விடுகிறோம்! — ஏகாதிபத்யம் கூறுகிறது இது போல் வார்த்தை அளவிலே, இதன் பொருள் என்ன என்று அறிவதிலே, சிக்கல் இல்லை. தெளிவாகத் தெரிகிறது, இதன் பொருள். ஆனல், சிக்கலும் சந்தேகமும் சொல்லிலே இல்லை, அந்தச் சொல்லை. உச்சரிக்கும் விதத்திலே, நிரம்ப இருக்கிறது—அந்த உச்சரிப்பு விந்தையிலே உலகையே மயங்கச் செய்யுமளவு பழக்கம் பெற்றவர்கள் இந்த பிரிட்டிஷார்—ராஜதந்திரம், அவர்களுக்குள்ள அணுகுண்டு! **போய்விடுகிறோம்!**

இந்த வாசகத்தை, நீங்கள் கூறிப் பாருங்கள் பலமுறை—விதவிதமாக—ஒவ்வோர் வகையான உணர்ச்சி தொனிக்கும்படி.

பயந்து கூறுகிறபடிச் சொல்லலாம், போய்விடுகிறோம் என்ற வாசகத்தை.

பயத்தை ஊட்டுவதற்குத் தக்க முறையிலே கூறலாம் அதனையே.

அலட்சியத்தைக் காட்டுகிற முறையிலே சொல்லலாம்.
சலிப்பைக் காட்டுகிற முறையிலே சொல்லலாம்
உறுதியை வெளியிடும் விதமாகக் கூறலாம்.
உபத்திரவம் வேண்டாம் என்கிற முறையிலே கூறலாம்.

இப்படிப் பலப்பல விதத்திலே இந்த ஒரே வாசகத்தைக் கூற முடியும். அப்படிக் கூறப்படுகிறபோது, ஒவ்வோர் முறைக்கும் ஒவ்வொரு விதமான உட்பொருள் இருக்கும். உதாரணமாக, அலட்சியத்தைக் காட்டுகிற முறையிலே '**போய் விடுகிறேன்**' என்பதை உச்சரித்தால், உட்பொருள் என்னவாக இருக்குமென்று யோசியுங்கள்.

''அட பைத்தியக்காரா! என்னமோ, போ, போ, வெளியே என்று கூவுகிருயே! இங்கே இருந்து ஆகவேண்டுமென்று எனக்கென்ன தலை எழுத்தா? எனக்கென்ன வேறு

இடம் இல்லையா, வேலை இல்லையா? அப்படி இங்கே இருந்தே தீரவேண்டுமென்று எண்ணவேண்டிய அளவு, இலாபம் இருக்கிறதா? என்னமோ பிரமாதமாக 'போ போ' என்று கூவுகிருயே, நான் போய் விடுகிறேன், பிறகு நீ மகாராஜ ஞக வாழு, நான் ஒன்றும் இங்கிருந்து போய்விடுவதாலே கெட்டுவிடமாட்டேன், நீயும் கொடிகட்டி எப்படி வாழு கிருய் என்ற இலட்சணத்தை நான் வெளியே இருந்து பார்க்காமலா போவேன்; ஆகட்டுமப்பா, நீ ஒன்றும் அதிக மாகக் கூவவேண்டாம், இதோ நான் போகிறேன்.''

இவ்வளவு பொருள் '**போய் விடுகிறேன்**' என்ற வாச கத்தை, அலட்சியத்தை வெளிப்படுத்தும் தோரணையிலே உச்சரித்தால், கிடைக்கும்.

இது போலவே, **போ வெளியே** என்ற வாசகத்தை, ஏகாதிபத்ய எதிர்ப்புப் படையினர் கூறுவதிலும், பலவித மான உச்சரிப்புகளும் ஒவ்வொரு விதமான உச்சரிப்புக்கும் ஒவ்வொரு வகையான பொருளும் உண்டு.

ஆகவேதான், '**போகிறேன் வெளியே**' என்று ஏகாதிபத்யம் சொல்கிறபோது, '**போ வெளியே**' என்று முழக்கமிட்டவர் கள், சந்தோஷப்படுவதா கூடாதா, சந்தோஷம் ஏற்பட்டா லும் வெளியே தெரியும்படிக் காட்டிக் கொள்வதா வேண் டாமா என்று யோசிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

வழக்கமாக ஆண்டுதோறும் காங்கிரசார் பொதுக் கூட்டங்களிலே கொண்டாடும் சுதந்திரதின விழாக்கள் தரும் அளவு ஆர்வம், ஆனந்தம்கூட, அட்லியின் அறிவிப்பால் ஏற்படுத்த முடியவில்லை.

கூடிக் கூடிப் பேசுவதும், குசு குசுவென்று கூறுவதும், கூர்ந்து பார்க்கவேண்டும் என்று சொல்வதும், கூறுவது பிறர் செவியில் படக்கூடாது என்று எண்ணுகிற முறையிலே பேசுவது மாகத், தலைவர்கள் உள்ளனர். தெளிவுபடக் கூற மறுக்கிருர்கள். மறைக்கிருர்கள் சில பேர்—சிலருக்கோ

உண்மையாகவே தெளிவு தெரியவில்லை!! பலருக்கு 'போய் விடுகிறோம்' என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் கூறுவது எந்த விதமான உச்சரிப்பு, பயமா, பயமூட்டவா, சலிப்பா, சோகமா, அலுப்பா, அலட்சியமா, உறுதியா, ஜாலமா என்று கண்டறிய முடியவில்லை. கண்டறியமுடியாதது மட்டு மல்ல. 'போ வெளியே' என்று நாம் ஒருவிதமாக உச்சரித் தோம், ஒரு வகையான கருத்தைக் கொண்டு. இப்போது, போய்விடுகிறோம்என்று ஏகாதிபத்யம் கூறுகிறது. நாம் கொண்டுள்ள கருத்தை நிறைவேறச் செய்யமுடியுமா, முடியாதா, என்பதைத் தீர்மானித்துக்கொள்ளவும் முடியவில்லை.

உதாரணமாக, 'போ வெளியே' என்ற வாசகத்தைக் காந்தியார் உச்சரித்ததற்கும், பாபு சுபாஷ் சந்திரபோஸ் உச்சரித்ததற்கும், மகத்தான மாறுதல் உண்டு. "போ வெளியே! ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆள்வது தர்ம மல்ல! ராணுவ பலத்தைக்கொண்டு ஆத்ம பலத்தை வெல்ல முடியாது. உன்னை விரும்பாதவர்களிடையே நீ இருப்பது உனக்கு அழகல்ல"—இவ்விதம் பல கருத்துகள் கொண்டது, காந்தியாரின் வாசகம். வங்கச் சிங்கம் கூறின போது, பொருள் அதுவா? இல்லை! "இளைத்தவர்களைப் பிடித் தாட்டும் ஏகாதிபத்யமே! என் நாட்டிலே, உட்பகையும் பிளவும் இருந்தபோது, இராணுவத்தைக் கொண்டும் ராஜ தந்திரத்தைக் கொண்டும் உன் ஆதிக்கத்தை ஏற்படுத்தி விட்டாய். உன் கொட்டம் அடக்கப்படும் நாள் வந்து விட்டது. உன் படை பலத்தைத் தாக்கக்கூடிய உறுதி கொண்டுவிட்டோம். துணைக்கு ஒரு படையும் அழைத்து வருகிறேன். ஆகவே, "போ வெளியே!" என்பது சுபாஷ் பாபுவின் பேச்சின் பொருள்.

இங்ஙனம் பலப்பல தொனி, ஒவ்வோர் குரலுக்கும் ஒவ் வொரு வகையான பொருள்!

போ வெளியே என்று பிர்லா கூறுவதற்குப் பொருள் என்ன? 'பைத்தியக்காரா! இங்கே பண அரசு நான் ஏற் படுத்திவிட்டேன், நீ எதற்காக இங்கு இருக்கவேண்டும்?—

உன்ஞல் முடியாதே இருக்க-ஏன் வீண் சிரமம்-உன் ஆதிக்கக் காலம் தீர்ந்துவிட்டது—ஆகவே போ வெளியே! இது பிர்லா பேசும்போது உள்ள பொருள்.

" மகாயோக்யஞட்டம் வந்தாய் அரசாள. என்னமோ நீதி நியாயத்தோடு தர்ம சாஸ்திரம் கெடாதபடிப் பாது காத்துத் தருவேன்னு நினேச்சா, நீ கடைசியிலே, கேவலம் நாஸ்திகா போலன்ஞ பால்ய விவாகம் கூடாது; ஜாதி ஆச் சாரம் கூடாது; என்று பேச ஆரம்பித்துவிட்டே. பழைய முறைகளேப் பாழ் செய்துண்டுவரே. வர்ஞஸ்ரமத்தை வதைக்கிறே. நீ நாசமாப்போக. உன்ஞலே, எங்களுக்கு இருந்த மதிப்பே போச்சு, கீழ் ஜாதிப் பயலெல்லாம் மேல் ஜாதியாராகிய எம்மை மிரட்டுகிற அளவுக்கு உன்ஞலே ஏற்பட்டுப் போச்சு. இந்த மாதிரியான காரியத்தைச் செய்துண்டு நீ இருப்பானேன்! போ வெளியே" என்ற சஞதனிகளின் உச்சரிப்புக்கும் பொருள் இருக்கிறது.

போ வெளியே என்று சொல்லும் ஒவ்வொரு வகை யினரும் ஒவ்வொரு விதமாக உச்சரித்து, ஒவ்வொருவித மான கருத்தைக் கொண்டிருந்தனர். அதுபோலவே, 'போகிறேன் வெளியே' என்று பேசும் ஏகாதிபத்யமும், ஒவ் வொருவரிடம் ஒவ்வொரு வகையாக உச்சரிக்கிறது, 'போகிறேன் வெளியே' என்ற வாசகத்தை. எனவேதான், இவ்வளவு குழப்பம்! இத்துணை சந்தேகம்!!

இதைத்தான் நாம் இரு சாராருக்கும் இருதய சுத்தி இல்லே என்று குறிப்பிட்டோம். இரு சாராரும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதால், பொதுமக்கள், ஒரு நல்ல முடிவுக்குவராதபடி, தவிக்கவேண்டி நேரிடுகிறது.

'ஏன் இந்தியாவை விட்டு வெளி ஏறுவது என்று தீர் மானித்து விட்டீர், அதற்கு ஒரு தேதியும் குறிப்பிட்டு விட்டீரே, நியாயமா, அழகா ...." இப்படி, கன்சர்வெடிவ் கட்சியினர் கேட்கிருர்கள், தொழிற் கட்சியின ரும் இந்தியா மந்திரியுமான பெருங் கிழவர் **பெதிக்லாரன்ஸை.**

என்ன பதில் கூறவேண்டும், இருதய சுத்தம் இருப்பதானல். ‘ ஐயா ! இந்தியாவை நாம் இது நாள் பரியந்தம் ஆட்சி செய்ததே, தர்ம விரோதம்; என்னமோ இதுவரை, அதனுல் இலாபம் அடைந்தோம். இப்போது உலகெங்கும் உரிமை முழக்கம் கிளம்பிவிட்டது. நாமே, பல நாடுகள் கூடும் மன்றத்திலே உட்கார்ந்து, நியாயம் பேசுகிறோம். இந்த நிலையிலே இந்தியாவில் நாம் இன்னமும் ஆதிக்கம் விரும்பு வது அழகல்ல. உரிமையுள்ளவர்களிடம் ஊர் இருக்க வேண்டுவதே முறை ’ — இவ்வளவுதானே வெளிவரும், பெதிக் பேச்சாக—உள்ளமும் உதடும் ஒன்றுபட்ட வேலையில் ஈடுபட்டால் ! ஆனல் என்ன பேசினர் ?

“ காங்கிரசில் ஒரு பலாத்காரப் புரட்சி மனப்பான்மை பரவி இருந்தது பூரண சுதந்திரத்தை அடைவதற்குப் புரட்சி கரமான முறைகளைப் பிரயோகிக்க வேண்டுமென்ற எண்ணமும் இருந்தது. ”

வெளியே போகிறோம் என்று அறிவித்ததற்கான காரணம் இது—பெதிக்லாரன்ஸ் கூறுவது.

வார்த்தைகளைக் குறைத்து, விஷயத்தைக் கூறுவதானல், இது எவ்விதம் இருக்கும் ?

“ உதைக்கத் தெரிந்துகொண்டார்கள், எனவே நாம் வெளியேறவேண்டும் ” இதுதான் பெதிக்லாரன்சின் பேச்சு.

இந்தப் பேச்சு, எதைக் காட்டுகிறது ? உரிமை உணர்ச் சியை மதித்து இந்தப் பெருங் கிழவனர் நடக்கிறார் என் பதையா ? இல்லை ! பலாத்காரத்துக்குப் பயப்பட்டு, அந்த நாட்டை விட்டு வந்துவிடுகிறோம் என்று கூறுகிறார். இந்தக் காரணம், சரியா ? தவறு ?—பிறகு பார்ப்போம். இதை ஒரு காரணமாகக் கூறினல், கூறும் பேர்வழியிடம், நமக்கு ஏளனம் பிறக்கும். ஆனல், நமது பிறப்புரிமைக்கு மதிப்பு தரும் பெருங்குணம் கொண்டவர் என்ற எண்ணத்தை நமக்குத் தரமுடியாதல்லவா ? நமது வணக்கம் அல்ல, நமது ஏளனச்

சிரிப்பையே இவருக்குப் பரிசளிக்க முடியும். இந்த வாசகத்தி லிருந்து, **பேர வெளியே** என்ற காந்திய உச்சரிப்பைக் கேட்டு அல்ல; **பேர வெளியே** என்ற பாபு சுபாஷின் உச்சரிப்பைக் கேட்டே, பெதிக்குகள் பேசுகிருர்கள் என்பது தெரிகிறது.

இந்தப் போக்கு கண்டு நாம் பெருமை கூட அடையலாம் —மகத்தான பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் நம்மைக் கண்டு மிரளு கிறது பார் என்று பூரிக்கலாம். ஆனுல் இந்தப் போக்கும் உண்மையின் உருவாக இல்லையே! சாத்வீகம்—அகிம்சை— ஆகிய கோட்பாடு கொண்டதாக இருப்பது காங்கிரஸ் என்ற வாதத்தைப் பெதிக்லாரன்ஸ் மறுத்து, உலகுக்கு அறிவிக் கிருர், **காங்கிரஸ் பலாத்காரப் புரட்சி மனப்பான்மை கொண்டு விட்டது** என்று இது நல்லெண்ணத்தோடு தரப்படும் நற் சாக்ஷிப் பத்திரமென்று காந்தியர்கள் கொள்ள முடியாது! போஸ் படையினர் கொள்ளலாம் மகிழ்ச்சி; உரிமை பெறுவ திலே, பலன் தரும் முறையே தர்மமான முறை என்ற தத்துவம் கொள்ளும் எவரும் மகிழ்வர். ஆனுல் பெதிக் லாரன்சோ, காங்கிரசைக் குறிப்பிட்டுக் கூறுகிருர், அது பலாத்கார இயக்கமென்று. காங்கிரசைக் கண்டிக்கிருர் என்று பொருள். கண்டிப்பதோடு, பலாத்காரம் மிகுந்து விடும் என்று எண்ணியே, நாங்கள் வெளி ஏறுகிறேம் என்று காரணம் காட்டுகிருர்.

சரி. இதற்குப் பிறகேனும் அவருடைய போக்கிலே மாறுதல் இல்லாமல் இருக்கிறதா என்ருல், மாறுதல் இருக் கிறது—குறிப்பிடத்தக்க மாறுதல். 'பலாத்கார மனப் பான்மை வந்து விட்டது அவர்களுக்கு, இனி நமக்கு அங்கு வேலை இல்லை, போய் விடுவோம்' என்று முடிவு செய்தாரா முதியவர்? இல்லை! அந்த பலாத்காரத்தைச் சமாளிக்க முடியுமா என்று யோசித்து, விசாரித்து, பார்த்திருக்கிருராம்!

''எல்லா விஷயங்களையும் பரிசீலித்தால்கூட 1948ம் வருஷத்திற்குப்பின் இப்பொழுதுள்ள அடிப்படையில் பிரிட்டிஷ் ஆட்சி போதுமான திறமையுடன் நடைபெறமுடியாதென்றே

இந்தியாவிலுள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து நமக்கு வந்துள்ள யோசனைகள் கூறுகின்றன.”

இதுவும் பெதிக்லாரன்ஸ் பேச்சு. பலாத்காரத்தை அடக்க முடியுமா, என்று யோசித்து இருக்கிறார் என்பது இதனால் தெரிகிறது. ஏன் அதனைப் பெறுவதற்காகப் போரா டுபவர்களை அடக்க நினைக்கவேண்டும்? அடக்குவதற்குச் சக்தி இருக்கிறதா இல்லையா என்று யோசித்தது பெருங்குணமா குமா? ஆகாதே! கணவன் தூங்கக் காணேமே, கட்டழகனைக் காணச் செல்லமுடியாதே என்று கற்புக்கரசியா கூறுவாள்?

சரி, யோசித்ததோடு விட்டாரா? இல்லை. கலந்து பேசினார், அதிகாரிகளை, அவர்கள் சொன்னார்கள், அது ஆகாத காரியம் என்று. பிறகே, வெளி ஏறத்தீர்மானித் தார். இவ்வளவும் அவர் பேச்சிலே புதைந்து கிடப்பவை. இவை எதுவும், அவருக்கோ, அவருடைய மக்களுக்கோ, பெரு மதிப்பைத் தேடிக்கொடுக்கக் கூடிய பெருங்குண மென்று பேதையும் கூறான். பலிக்காது என்று தெரிந்தது, எனவே கம்பி நீட்டுகிறார்கள்—என்ற கடைவீதிப் பேச்சு தான், பரிசாகக் கிடைக்கும்.

ஒழியட்டும். இந்த வாதமாவது உண்மையா? கொஞ்சம் ஆராய்ச்சி வேண்டும் இங்கு. ஏனெனில், இங்கு நாம், மன மயக்கத்திலிருந்து தப்பினால் மட்டுமே உண்மையை உணர முடியும்.

நமக்கு மனமயக்கம் எப்படிப் பிறக்கக்கூடும் என்றால், சர்வவல்லமை பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே நம்மைக்கண்டு கிலி கொண்டுவிட்டது என்று நாம் எண்ணுவோமேயானால், நம்மை நாமே ஏமாற்றிக்கொண் டவர்களாவோம். பலாத்காரம் பரவி விட்டது—அதனை அடக்க முடியாது என்று உயர்தர அதிகாரிகள் கூறிவிட்டனர் என்று பெதிக்லாரன்ஸ் பேசுவதைக் கேட்டு மகிழ்ந்தால் மனமயக்கம் நிச்சயம் ஏற்படும். நாம் யோசிக்கவேண்டியது:

1. உண்மையிலேயே அவ்விதமான அளவிலும் முறையிலும் பலாத்காரம் நடந்ததா?

2. பலாத்காரத்தை அடக்காமல் விட்டுவிட்டனரா பிரிட்டிஷார்?

3. பலாத்காரத்தை அடக்கும் திறமை அவர்களுக்கு இல்லையா?

4 பலாத்காரத்தை இதற்கு முன்பு நமது பூபாகத்தில் காட்டினதே இல்லையா?

5. அப்போது பிரிட்டிஷார் செய்தது என்ன?

இவைகள் நமது சிந்தனைக்குரியன.

உலகெங்கும் ஒரே அமளி! அந்த நேரத்தில் ஓடும் ரயிலைக்கவிழ்த்து, தபாலைக்கொளுத்தி, தந்திகளை அறுத்து, அதிகாரிகளைத் தாக்கி, ஆகஸ்ட் நடந்தது. தலைவர்களெல்லாம் சிறையில்! வாலிபர்கள் தூக்குமேடைவரை இழுத்துச் செல்லப்பட்டநிலை.

ஆனால் இறுதியில் நடந்தது என்ன?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆகஸ்டை அடக்கிற்று.

அதைவிட உருவான முறையிலும், வெளியார் உதவியுடனும், பாபு சுபாஷ் படையே திரட்டிவந்தார். நடந்தது என்ன?

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் அதனை அடக்கிவிட்டது.

இந்த முயற்சிகளை முறியடிக்க பிரிட்டன் தன் பலத்தை உபயோகிக்கத் தயங்கவுமில்லை—அதிலே வெற்றி பெருமல் போகவும் இல்லை.

பலாத்காரத்துக்கு உண்மையிலேயே பயந்து ஆட்சி உரிமையை ஒப்படைப்பதாக இருந்தால் 1942ல், நடந்தேறி இருக்கவேண்டும்! பர்மா பாதையிலே நுழைந்த போஸ்

படை, வெற்றி முரசு கொட்டிக்கொண்டு டெல்லி செங் கோட்டையில் நுழைந்திருக்கவேண்டும். ஆனால், ஏகாதிபத் யம் உலகெங்கும் போரும், தன் தாயகத்துக்கு, ஆபத்தும் சூழ்ந்திருந்த அந்த நாளிலே, பலாத்காரத்தை அடக்கிற்று அப்போது பெதிக் லாரன்சும் இருந்தார்—அவருடைய கட்சியின் முதலமைச்சர் அட்லி, சர்ச்சிலுக்குத் துணைவராக இருந்தார்—பிரிட்ஷ் ஏகாதிபத்யம், பலாத்காரத்தை அடக்கிற்று,

அத்தகைய ஏகாதிபத்யம், உலக இருள் நீங்கி, ஆகஸ்ட்டு இயக்கத்தினரே ஆட்சிபுரிய இசைந்தான பிறகு. போஸ் மறைந்த நிலையில், போஸுக்குத் துணைவந்த ஜப்பான் சரணடைந்த நிலையில், உலக அமளியைக் கிளப்பிய ஜெர்மனி சரண் புகுந்த பிறகு, இன்று ஏதோ பரம சாதுபோல நடிப்பதும், பலாத்காரம் வளருகிறது, அதனை அடக்கி திறமையாக ஆட்சி செய்ய முடியாது என்று பேசுவதும் உண்மையா, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் முறையா, என்பதுபற்றி தீரச்சிந்தித் தால்தான் நமக்கு இயற்கையாக ஏற்படக் கூடிய மன மயக்கம் ஒழியும்.

நமக்கு அத்தகைய மயக்கம் ஊட்டவே ஏகாதிபத்யம் இன்று மும்முரமாக முனைகிறது.

"ஏ! அப்பா! நீ மகா பெரிய சூரன்! உன்னோடு நான் சண்டைக்கு நிற்க முடியுமா? இதோ உனக்கே இருக்கட்டும் வெற்றி மாலை" என்று கூறி, மாலையிட வருகிற மல்யுத்தக் காரனைக் கண்டு, மதி குறைந்தவன் மகிழ்ந்து மாலையைப் பெறத் தலையைக் குனிந்து நின்றால், மாலை விழுமோ, அல்லது, தலையிலே தாக்குதல் நடக்குமோ என்ன நேரிடும் என்று திட்டமாகக் கூறமுடியாது.

பலாத்காரத்தைக் கண்டு பிரிட்டன் அஞ்சுவதாகக் கூறுவது மன மயக்கமூட்டும் மாத்திரை.

1857-ல் நடைபெற்ற 'சிப்பாய் கலகம்', சிறு குழந்தை விளையாட்டல்ல. செண்டு வீசிக்கொண்ட காரியமுமல்ல! பட்டாளங்களே முன்னின்று போரிட்டன, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரிடையாக. வெள்ளையர்க்குப் பல இடங்களிலே பேராபத்து. பல இடங்களிலே சிப்பாய்கள் வெற்றி பெற்றனர். டில்லியிலே, மொகலாய பரம்பரையினரான, இரண்டாம் பகதூர்ஷாவுக்கு பட்டம் கூடச் சூட்டினர். வீரர்களும் வீராங்கனைகளும், இந்து முஸ்லிம் என்ற பேதம் விட்டுப் போரிட்டனர். பலாத்காரம் என்ற சிறு சொல் அல்ல, விடுதலைப் போர் என்ற அடைமொழிக்கு உரிய சம்பவம். ஆனால், அந்த நாள் பெரிக் லாரன்சுகள் என்ன செய்தனர்? புரட்சியைப் பொசுக்கினர். டில்லியில் எந்த பகதூர்ஷாவுக்கு இந்திய சக்கரவர்த்தி என்று இந்துவும் முஸ்லீமும் சேர்ந்து முடிசூட்டப்பட்டதோ, அதே பகதூர்ஷா கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, ரங்கூனில் 1862-ம் ஆண்டு, தமது 87-ம் வயதிலே இறந்தார். அவருடைய கல்லறைமீது, பாபு சுபாஷ் சந்திர போசின் கண்ணீர் சிந்தப்பட்டது நமது நாட்களில்!

அந்த மாபெரும் புரட்சியின்போது, விட்டுக் கொடுக்காத ஏகாதிபத்யம், இன்று பலாத்காரம் வளருமோ என்று பயந்து, விட்டுக் கொடுப்பதாகக் கூறுவது, வரலாற்றையும், பிரிட்டிஷ் சுபாவத்தையும் மறந்துவிடும்படி நமக்குக் கூறுவதாகும். நாம் அந்த மன மயக்கத்தில் விழ மறுக்கிறோம். ''போய்விடுகிறோம்'' என்ற பேச்சை, ஏதோ பயந்தவர்கள் போல உச்சரிக்கிறார்கள், பிரிட்டிஷார். அது நமக்குத் தவறான கருத்தை ஊட்டுவதற்கான முறை. பயந்து அல்ல, அவர்கள் அந்த வாசகம் கூறுவது. பயம் இருப்பதுபோல பாவனை செய்கிறார்கள்.

உண்மைக் காரணம் என்ன, இந்த வாசகத்துக்கு? பயம் காரணம் அல்ல, என்று வாதாடுவது கிடக்கட்டும். வேறு என்னதான் அதற்குக் காரணம் என்று கேட்கத் தோன்றும். இதற்கான காரணத்தைக் கண்டறிய, மீண்டும்

நாம், கடைசி மன்னர் மன்னன் பகதூர்ஷாவின் காலத்தை நோக்கவேண்டும்.

சிப்பாய் கலகம் 1857-ல். அதனை அடக்கியான பிறகு 1858-ல், இந்தியாவின் ஆளுகையை அதுவரை நடத்திவந்த கிழக்கிந்திய கம்பெனி, பிரிட்டிஷ் மகாராணியாருக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டது.

"நாம் வந்ததோ வியாபாரத்திலே இலாபம் திரட்ட; வந்த இடத்திலேயோ வியாபாரத்தினால் இலாபம் கிடைத்ததோடு, வகையற்ற முடி மன்னர்களும் மதியற்ற மந்திரிகளும், ஒற்றுமைப் படும் மார்க்கமற்ற மக்களும் இருந்த காரணத்தால், அரசு அமைக்கும் நிலையே கிடைத்துவிட்டது. அதன்படி ஆளவும் ஆரம்பித்தோம்; ஆனால் கலகம் வருகிறது, வருகிற கலகத்தை அடக்கவேண்டி இருக்கிறது, அடக்க முடிகிறது என்ற போதிலும் அடக்கும் சிரமம், செலவு, வேலை இவைகளைத் தாங்கவேண்டி வருகிறது. தொல்லையின்றி வியாபாரத்திலே பணம் திரட்டுவதை விட்டு, துப்பாக்கி தூக்கி திரிவானேன், இந்த வேலை நமக்கு வேண்டாம்- நாம் வியாபாரத்தோடு இருந்துவிடுவோம். முடியும் வேண்டாம்; அதைக் காக்க ஒரு படையும் வேண்டாம். அமளி வேண்டாம்; அதன் பயனாக நமக்கு வியாபாரத்தில் கிடைக்கும் இலாபமே கெடுகிறது. இந்த ஆளுகிற வேலையை நாம் நமது நாட்டு சர்க்காருக்கே 'தானம்' தருவோம்," என்ற முடிவுக்கு அந்தக் காலத்துக் கிழக்கிந்தியக் கம்பெனி வந்தது. அதன் பயனாகவே, இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ராணியார் மகாராணியாக முடிந்தது— இங்கு கம்பெனி ஆட்சிக்குப் பதில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டது.

இன்றும், நாட்டிலே கலக உணர்ச்சி இருப்பதைக் காரணமாகக் காட்டப்படுகிறது. படைவீரரின் போரை அடக்கியவர்கள், பகதூர்ஷாவை பர்மாவில் சாகவிட்டவர்கள், இன்றைய பலாத்காரத்துக்குப் பயந்தது போல்

பேசுவது, வெறும் பாசாங்கு. உண்மை எண்ணம் என்ன? கம்பெனியார் அந்த நாளில் கொண்டது போன்ற எண்ணமே தான். "ஆளுகிற வேலை சிரமம், தொல்லை, நேரக்கேடு, இவைகளைத் தருகிறது. ஆள்வதை எதிர்க்கிறவர்களோடு மல்லுக்கு நிற்பதால் வேறு சிரமம், செலவு, தொல்லைப்பட வேண்டி இருக்கிறது. இந்தக் காரியங்களிலே ஈடுபட்டபடி இருந்தால், முக்கியமான காரியமும், மூலக் காரியமும், நல்ல இலாபம் தரும் காரியமுமான வியாபாரத்தைக் கவனிக்க நேரமில்லாமல் போகிறது. எதற்காக இலாபத்தைக் கவனிக்காமல் 'இராஜ்யம் ஆள்கிற' வீண் வேலையைக் கவனிக்க வேண்டும்—என்று, இன்றைய பிரிட்டிஷார் எண்ணுகிருர்கள்; அதாவது, இலாப நஷ்டக் கணக்கெடுத்துப் பார்க்கிருர்கள். அந்தக் கணக்கின்படி, ஏகாதிபத்யம், அரசியலில் அரசு செலுத்திக்கொண்டு, அதே போது பொருளாதாரத் துறையிலும் (வியாபாரத்தில்) ஆதிக்கம் செலுத்திக் கொண்டு இருப்பதிலே, நிகர இலாபம் குறைகிறது என்பது தெரிகிறது. ஆகவே தொல்லையைக் குறைத்துக்கொண்டு இலாபத்தைப் பெறுவதற்காக 1858-ல் எவ்வண்ணம், வியாபாரக் கம்பெனியாகிய கிழக்கிந்தியக் கம்பெனி "இந்திய ராஜ்யத்தை" மகாராணியாருக்குக் கொடுத்ததோ, அதுபோல 1948-ல் 'இந்திய ராஜ்யத்தை' இந்தியருக்குத் தருவதற்கு, இலண்டன் அரசு முன் வந்திருக்கிறது.

—ஏகாதிபத்யம் இலாபம் தரவில்லை அரசியலிலும் ஈடுபடுவதால். எனவே ஏகாதிபத்தியம், இலாபம் தராத அரசியலை விட்டுவிட்டு, பொருளாதாரத்தை மட்டும் கவனித்தல்—

—என்ற முடிவுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் வந்துவிட்டது. ஆக பயமல்ல, தந்திரம் இந்த அறிக்கைக்குக் காரணம்! ஏகாதிபத்தியம் சாகவில்லை. மாறிக் காட்சி தருகிறது. ஏகாதிபத்யம் இனி வைசிராய் கவர்னர்களை அனுப்பாமலிருக்கக் கூடும். ஆனல் வியாபாரக் கோமான்களையும், வர்த்தகக் கோஷ்டிகளையும் அனுப்பும்! புதிய புதிய பாரி துரைகள், சிம்சன்கள், லாரன்சு மேயோக்கள் வருவர், வியாபாரத் துறையிலே.

மயில் கழுத்து

பச்சைக்கும் சிகப்புக்கும், கருப்புக்கும் மஞ்சளுக்கும், இருக்கும் வர்ண வேறுபாடு எளிதிலே தெரிந்துவிடும். வர்ண வியாபாரி மட்டுமல்ல, சாமான்யருங்கூடத் தெரிந்துகொள்வார்கள்; கண்டதும் கூறிவிடுவார்கள். ஆனால் இலைப் பச்சைக்கும் கிளிப் பச்சைக்கும், ஆரஞ்சுக்கும் மஞ்சளுக்கும், இப்படி உள்ள வர்ண வேறுபாடுகளை எளிதிலே புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆங்கிலேயரிலே, ஆளுக்கு ஆள் உள்ள வித்யாசம், பச்சைக்கும் சிகப்புக்கும் இடையே தெரியக்கூடிய, பளிச்சென்று பாமரனுக்கும் புரியக்கூடிய வித்யாசம் போன்று இருப்பதில்லை. ஆரஞ்சுக்கும் மஞ்சளுக்கும் இருக்கும் மாறுபாடு போன்ற அளவுகூட அல்ல! இன்னும் விசித்திரமாக இருக்கும். நல்ல உதாரணம் தேவையானால், 'மயில் கழுத்து' கலர் போன்றுள்ளதிலே பார்க்கப் பார்க்க விதவிதமான கலர் தெரிவதுபோல, பச்சை, நீலம், நீலம் கலந்த பச்சை, பச்சை கலந்த நீலம், இடையே கொஞ்சம் மங்கலான மஞ்சள் கலந்துள்ள பச்சை, இவ்வண்ணம் பலப்பலவாக தோற்றமளிப்பது போன்றிருக்கும் ஆங்கிலரின் குணம்! எனவே ஒரு ஆங்கிலருக்கு மற்றோர் ஆங்கிலர் எந்த வகையிலே மாறுபட்டிருக்கிறார், குறிப்பிடத்தக்க விளக்கமாகத் தெரியக்கூடியபடி, பளிச்சென்று பார்வைக்குப்படக் கூடிய விதமாக, என்னென்ன குண விசேஷ மாறுபாடுகள் உள்ளன என்று கண்டுபிடிப்பது சிரமமான காரியம். பச்சைக்கும் சிகப்புக்கும் பளிச்சென்று மாறுபாடு தெரிவது போல, சீனனுக்கும் ஆங்கிலேயனுக்கும்

இடையே தெரியும். ஆங்கிலேயருக்குள்ளாகவே ஒரு வருக்கொருவர் உள்ள வேறுபாடுகள், குணத்தைப் பொறுத்த மட்டிலே கண்டறிவது கடினம்; ஏனெனில் மயில் கழுத்திலே உள்ள வர்ணத்தை எப்படி, நீலம், பச்சை, மஞ்சள், என்று தெளிவாகக் குறிப்பிட முடியாதோ அது போல, ஆங்கிலேயரின் குணத்தையும் குறிப்பாக, இப்படிப் பட்டது என்று கூறிவிட முடியாது. இது ஆங்கிலருக்கு மட்டுந்தாஞ, மற்றவர்க்கும் பொருந்தாதோ என்ருல் மற்ற இன மக்களிடையே உள்ளதை விட இந்த விசேஷம் ஆங்கில இனத்தாரிடம் மிகப் பெரிய அளவிலும் அதிகமாகப் பரவியும் இருக்கும். எனவேதான், உலக வழக்கு மன்றங்களின் முனபு தண்டனை பெற்றே தீருவர் என்ற நிலை ஏற்பட்ட பல சமயங் களிலே ஆங்கிலேயர் தப்பித்துக் கொண்டிருக்கின்றனர்; ''செச்சே! இந்த ஆள் இதெல்லாம் செய்திருக்க மாட்டார்'' என்று வழக்கு மன்றத்தாரே கூறும்படி நடந்துகொண்டிருக் கின்றனர். நமது நாட்களிலே மவுன்ட்பேடன் போன்ற கடற்படைத் தளபதிகளைப் பற்றிக் கேள்விப்படுகிருேம். அத்தகையவர்களின் வீரம் திரம் ஆகியவற்றைப் பாராட்டு பவர்களைக் காண்கிருேம். நமது நெஞ்சு திடுக்கிடும், இத்த கைய தளபதிகளைக்கொண்டு சிறந்து விளங்கும் ஆங்கிலேய இனத்திலே, கருத்துக்கு எட்டாத காலத்தில் அல்ல வர லாற்றுக் காலத்திலே, அதிலும். நாலைந்து நூற்ருண்டு களுக்கு முன்பு கடற்கொள்ளையைத் திறம்பட, தீரமாக நடத்திய ஆங்கிலேயர் இருந்தனர் என்ற செய்தியைப் படிக் கும்போது. ஆனுல் உண்மை அது. அலைகடலில், திக்கு பற்றிய தெளிவுமற்று, முரடர்கள், கொலைகாரர், கூலிகள் ஆகியோரை உடன் சேர்த்துக்கொண்டு, ஆங்கிலேய கடற் கொள்ளைக்காரர்கள், ஆதிக்கம் செலுத்திவந்தனர். ஆச் சரியம் அது மட்டுமல்ல. அவர்கள் ஆதிக்கம் பெற்று, பொருள் திரட்டி, வீடு விரும்பிய பிறகு, கௌரவம் பெற் றனர்; சர்க்காரிலே கூட மதிக்கப்பட்டனர். கடற்கொள்ளை யின்போது அவர்கள் காட்டிய அபாரமான திறனையும் தீரத் தையும் பாராட்டினர், கடற்கொள்ளை தவறுதான் என்ற

போதிலும். அவர்கள் அதுபோது கண்டுபிடித்த கடல் மார்க்கங்களும், தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட நாடுகளும் பிறகு, நாகரீகமான முறையிலே, இலாபம் பெறுவதற்குப் பயன் பட்டது என்று பூரிப்புடன் எழுதிய ஆங்கில வரலாற்றுச் சுவடி ஆசிரியர்களும் உண்டு. எதற்குக் கூறுகிறேம் இதனை என்றுல், ஆங்கில இனத்தின் குணவிசேஷம் பலப்பல; அவை மயில் கழுத்து போல இருக்கும். இன்ன வர்ணம்தான் என்று தெளிவுடன் கூறிவிட முடியாது என்பதை விளக்குவதற்குத்தான்.

இந்த வர்ண ஜாலத்திலே, ஆழ்ந்த கருத்து இருக்கிறது. ஆங்கில சாம்ராஜ்யத்தின் நிலை பெற்ற தன்மைக்கு இதுவே மூலமாக இருக்கும் பலம். தெளிவாகப் பிறருக்குப் புரிய முடியாத வர்ணபேதம், அதாவது குண விசேஷம் இருக்கிற காரணத்தாலேதான், கடைசிவரையில் அவர்களின் செயல்களுக்குச் சரியான, உண்மையான காரணம் என்ன என்று கண்டறிய முடியாதபடி, உலகிலே பல தலைவர்கள் திகைத்திருக்கின்றனர். விட்டுக்கொடுக்கும் சுபாவம் கொண்டவர்களா, பிடிவாதக்காரரா, இளகிய மனமா, இரும்பு செஞ்சுமா, சுயநலமா, பரோபகார சிந்தனையா என்ன காரணம் இந்தச் செயலுக்கு, என்று ஆராயத் தொடங்கினுல் ஆங்கிலேயர் செய்யும் எந்தக் காரியத்துக்கும், சரியான காரணம் கண்டுபிடிக்க முடியாது. தீர்ப்புகூற முடியாது. திகைக்க வேண்டும், அல்லது தவருன முடிவுக்கு வரவேண்டி நேரிடும். அப்படி இருக்கும் அவர்களின் செயல்! ஒரு வேடிக்கை பாருங்கள். இந்திய பூபாகத்திலே அந்த நாட்களிலே வியாபாரத்துக்காக ஆங்கிலர் வந்தபோது மொகல் அரசு, வங்க அரசு, மராட்டிய அரசு, கர்ளுடக அரசு, பாளையங்கள் இப்படிப் பலப் பல இருந்தன — இவைகளை இருக்கும் இடம் தெரியாமல் செய்து விட்டனர் ஆங்கிலர். இந்திய பூபாகத்திலே பழமையாக உள்ள சின்னங்களை, முறைகளை அழிப்பவர்கள் என்று தீர்ப்புக் கூற வேண்டி நேரிடும் இந்தச் சம்பவத்தை மட்டும் கவனித்தால். ஆனல், இவ்வளவு

அரசுகளைக் கலைத்த அதே ஆங்கிலர், இடிந்த கோட்டை, தூர்ந்த அகழ், அகலமான கட்டிடம், சரிந்துள்ள சுற்றுச் சுவர், பொட்டலாகிவிட்ட தோட்டம், உருப்புக் குலைந்த கல் லுருவங்கள், ஆகிய பல பழைய சின்னங்களை, அக்கரையுடன் பாதுகாத்துத் தருகின்றனர், அதற்கெனப் பணம் செலவிடு கின்றனர்; தனி இலாக்காவும் ஏற்படுத்தினர். டில்லி பாதுஸா, வங்க அரசர், மராட்டிய பீஷ்வா, கர்னாடக நவாபு, தஞ்சாவூர் ராஜா, பாளையத்தின் அதிபர், இவர்களை வீட்டுக்கு அனுப்பியவர்கள். அந்த வகையின ரின் முன்னோர்கள் அமைத்த சின்னங்களை மட்டும் அழிக்கா மல் கெடுக்காமல், பாதுகாக்கும் பொறுப்பை மேற்கொண் டனர், ஏன்? அதுதான் அவர்களின் குண விசேஷம்—வர்ண ஜாலம்! இந்தச் சம்பவத்தை மட்டும் கொண்டு, ஆங்கிலே யரின் குணத்தை நிர்ணயிப்பது என்றால், "ஆஹா அவர்கள்! தர்மிஷ்டர்கள்; பழைய ரட்சகர்கள்; பிடி பட்ட நாடு என்ற போதிலும், அங்கும் புதைபட்ட பொருளையும் தோண்டிக் காட்டி. நமது பூர்வ பெரு மையை நாமே உணரும்படிச் செய்யும் பெருந்தன் மையினர்" என்று கூறத்தோன்றும்—புகழத்தோன்றும். உடன் கட்டை ஏறுவதைத்தடுத்தனர், ஆனால் தீண்டா மையைத் தடுக்கவில்லை! தக்கர் கூட்டத்தை ஒடுக்கினர், ஆனால் மதத்தரகர் கூட்டத்தைக் கொழுக்கவிட்டனர்! வியாதிக்குப் புதுமருந்து தந்தனர், ஆனால் ஜாதி பேதத்தை வளரவிட்டனர்! பெரிய அரசுகள் ஏற்படா வண்ணம் செய்துவிட்டனர், அதேபோது சிற்றரசர்களைச் சிங்காரமாக வாழச்செய்தனர்! நகர் பலஎழச்செய்தனர்! ஆனால் நாற்ற மெடுக்கும் சேரிகளைத் திருத்தாது விட்டனர். பாசியை நீக்கிவிட்டுக் குளத்தின் படிக்கட்டுகளை இடித்த கதைபோல, கனியைக் கையிலே கொடுத்துவிட்டு எதிரே கடுவனை நிறுத்தியது போல, காலிலே தண்டை பூட்டிவிட்டு, கழுத்திலே காணப்பட்ட புண்ணுக்கு மருந்திட மறுப்பது போல, இப்படி விசித்திரமும் வேதனையும் தருவதாக இருக்கும் அவர்களின் அந்த நாள் நடவடிக்கைகளை

ஆராய்ந்தால். ஏன் இவ்வண்ணம் செய்தனர்? இந்தச் செயல்களைக் கொண்டு, இவர்களின் குணம், நல்லதா கெட்டதா என்று திட்டமாகக் கூறமுடியவில்லையே என்று திகைத்தவர்கள் அனேகர். 'மயில் கழுத்து' ஒரு வர்ணம் மட்டுமல்லவே! அதுபோன்றே அவர்தம் குணத்தின் தன்மை! எனவே அவர்களின் செயல்களுக்குச் சரியான காரணம் கண்டறிவது கடினம். கடினமே தவிர, முடியாத காரியமல்ல. ஒவ்வொரு செயலையும் தனித்தனியே எடுத்து ஆராய்ந்து, ஒன்றோடொன்றை ஒப்பிட்டுப் பார்த்து, சிந்தித்தால் விளங்கிவிடும் உண்மை. அவர்கள், **நிலைமையை அறிந்து நடப்பவர்கள்:** நல்லது கெட்டது என்ற அளவு கோல் அல்ல, இப்போது இது செய்யலாமா வேறொன்று செய்யலாமா என்பதே அவர்களின் அளவுகோல். தேவையா கூடாதா, ஏற்பாரா, எதிர்ப்பாரா, இவைபற்றிக்கூட அவர்கள் அவ்வளவாக யோசிக்கமாட்டார்கள்; **இப்போது எந்தக் காரியம் செய்யவேண்டும்**, என்பதையே மிக முக்கியமாகக் கருதுவர். நிலைமைகளைக் கண்டறிவதிலும், அந்த நிலைமைக்கு ஏற்ற காரியத்தைச் செய்வதிலுமே அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்தனர்—இருக்கின்றனர்—இருப்பர். தக்கர்கள் சுற்றித் திரிவதால், நாட்டிலே கொள்ளை நடக்கிறது, செல்வம் பாழாகிறது, அமைதி கெடுகிறது, அதனால் வியாபாரத்திற்கு வசதியும் கெடுகிறது, இலாபமும் குறைகிறது, எனவே தக்கர் கூட்டத்தை இப்போது அடக்கியாகவேண்டும் என்று தீர்மானித்தனர். அதேபோது, தக்கர் கூட்டம் போலக் கொள்ளையடிக்காவிட்டாலும், மக்களின் ஏமாளித் தனத்தால், சுரண்டிப் பிழைக்கும் மதத்தரகர்களாலும் தானே செல்வம் சீரழிகிறது, உழைப்பவன் கெடுகிறான் என்று கண்டறிய முடியாதா ஆங்கிலரால்! முடியும்; ஆனால் மதத் தரகர் விஷயமாக ஏன் தலையிடவில்லை? அவர்களின் தொழில், தங்கள் தொழிலைக் கெடுப்பதில்லை. மதத்தரகர்கள் 'தொப்பி போட்ட துறை'யிடம் செல்வதில்லை' எனவே நமக்கென்ன இதனால் தொல்லை, நடக்கட்டும் என்று சும்மா இருந்துவிட்டனர். இதுபோலத்தான் நிலைமையை

அறிந்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், ஒவ்வொரு சமயத்திலும். ஏடுகளைப் புரட்டிப் பார்த்தோ, உபதேச மொழிப்படியோ, தர்ம சாஸ்திர தயா விஷயம் என்ற தத்துவங்களின்படியோ, நிலைமைக்கேற்ற நடவடிக்கை என்ற ஒரு முறைதான், அவர்களின் செயலிலே காணப்படும் விளக்கம் —மிகச் சிரமப்பட்டே கண்டறிய முடியும் இதனை. மயில் கழுத்து! வர்ணம் விளங்காது!

இந்த முறை, இங்குமட்டுந்தான் என்று கூறுவதற்கில்லை, ஆங்கிலர் தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட இடமெங்கும், இதே முறைதான்.

இந்த உண்மையை உணர்ந்தால், 1858-க்கும் 1948-க்கும் உள்ள வித்தியாசம் விளங்கும்—போட்டு அடித்த காலம் 1858. போகிறேன் வெளியே என்பது 1948-ல்! முற்றிலும் முரணான, மூக்கின்மேல் விரல்வைக்கத்தக்க இந்த நடவடிக்கைகளின் தன்மையைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், ‘ நிலைமைக்கேற்றபடி மட்டுமே நடவடிக்கை எடுக்கும் குணம் ஆங்கிலருக்கு’ என்ற மூல காரணத்தை உணர்ந்தாகவேண்டும்.

பிரிட்டிஷ் பயங்காளித்தனமென்றோ, தொழிற் கட்சியின் தாராள நோக்கமென்றோ, அட்லியின் அன்பென்றோ, பெதிக்லாரன்சின் பெருங்குணமென்றோ, இன்றைய நடவடிக்கையைக் கருதினால் நாம் ஏமாறுவோம். பழக்கமான முறை. ஆங்கிலரின் பிரத்யேக முறை. சாம்ராஜ்யங்கள் ஏன் அழிந்துவிட்டன என்று ஆராய்ந்து அறிந்ததன் பலனாக அவர்கள் கண்டறிந்த உண்மையைத் துணைகொண்டு வகுத்துக் கொண்ட முறை; நிலைமைக்குத் தக்கபடி நட என்பது. அதுதான் இன்றையப் போக்குக்கும் காரணம்! வேறு பல காரணங்கள் காட்டப்படலாம், கீழே வீழ்ந்த பனம்பழத்துக்கு மேலே உட்கார்ந்த காகத்தைக் காட்டுகிற முறைப்படி! பெதிக்லாரன்சின் நாட்களிலே, கேட்கிறோம், போகிறோம் வெளியே என்ற பேச்சினை, இது பெருங்குணத்தின் விளைவு

என்று கருதினல் பயன் இல்லை—முழு உண்மை தெரியாது. லாரன்சுகள் பலரகம் இருந்தனர். இந்திய பூபாகத்துடன் தொடர்பு கொண்டவர்கள்! அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது நாட்களிலே காணப்பட்ட நிலைமைக்கு ஏற்றபடியே நடவடிக்கையை மேற்கொண்டனர். லாரன்சுகள் பலர், ஆனால் மூல நோக்கம் அடிப்படையான முறை பல அல்ல, ஒன்று தான். இந்திய பூபாகத்தை விடுவிக்கும் பெதிக்லாரன்சைக் காண்கிறோம் இன்று. நாம் கண்டதில்லை இந்திய பூபாகத்தைத் தமது ஆளுகையின்கீழ் கொண்டுவர வேலைசெய்த லாரன்சுகளை! அவர்களைக் காட்டுவது, படக்காட்சிக்காக அல்ல! அந்தந்த லாரன்சுகள் அவ்வப்போது ஏற்பட்ட நிலைமைகளுக்குத் தக்க நடவடிக்கைகளைத்தான் எடுத்தனர் என்பதை விளக்க. பெதிக் லாரன்சு, பிரிட்டிஷ்—இந்தியத் தொடர்பிலே பிரபல்யம் பெற்ற நாலு லாரன்சுகளிலே, ஒருவர் இன்றைய நாட்களில் உள்ளவர். இதற்கு முன் ஒரு ஜான் லாரன்சு. மற்றோர் ஹென்ரி லாரன்சு. அதற்கும் முன்பு ஸ்ட்ரிங்கர் லாரன்சு என்பவர்கள் இருந்தனர்'

இந்திய பூபாகத்தை ஆங்கிலர் பிடிக்கும் போக்கும் நிலையும் ஏற்பட்டதே, கிளைவ் காலம் என்பது பள்ளிப் பிள்ளைகட்கும் பாடம். அந்தக் கிளைவ் சாதாரணச் சோல்ஜராகச் சென்னை வந்தபோது, அவர் எந்தப் பட்டாளத்திலே சேர்ந்தாரோ, அந்தப் படைப் பிரிவின் தலைவன் பெயர் ஸ்ட்ரிங்கர் லாரன்சு. சென்னையிலே வியாபாரக் கோட்டை அமைத்துக் கொண்ட வெள்ளையர்களின் படைக்குத் தலைவர். மேஜர் ஸ்ட்ரிங்கர் லாரன்சு வீரர் என்றும், படைகளை நடத்திச் செல்வதிலே திறமை மிக்கவர் என்றும் புகழப் பட்டவர். அவர் நாட்களிலே நிலைமை என்ன? உள்ளே புகுந்த சமயம்! நமது நாட்டிலே வீரம் கரிகிவிடவில்லை, நீறு பூத்து இருந்த நேரம். அதேபோது, ஆங்கிலர் மட்டுமல்ல; பிரெஞ்சுக்காரரும் இங்கு மோப்பம் பிடித்துக்கொண்டு வந்திருந்தனர், இலாப வேட்டைக்கு. ஆகவே மேஜர் ஸ்ட்ரிங்கர் லாரன்சு நாட்டுக் குடையவரின் உரிமை உணர்ச்சியை மட்டுமல்ல,

போட்டியிட வந்த பிரெஞ்சுக்காரரின் ஆசையையும் ஒருசேர உருக்குலைக்க வேண்டியவரானார். அந்த நிலைமைக்கு ஏற்ற நடவடிக்கையைத் தான் மேற்கொண்டார். கட்சிகள் உண்டானபோது, அதற்கு இடையே புகுவது, ஒரு நவாப்புக்கோ, ராவுக்கோ, எதிரிடையாக இன்னொருவர் கிளம்பினால், அதிலொரு பக்கத்துக்கு "சுடும் ஆளை" அனுப்பி வைப்பது; வெற்றி பெற்ற பிறகு, துணை நின்றதைக் கவனத்திற்குக் கொண்டுவந்து சொந்தம் கொண்டாடி வியாபாரத்துக்கு வசதிகளைப் பெறுவது; பிரெஞ்சுக்காரர்கள் ஒருவர் பக்கத்திலே சேர்ந்தால், உடனே எதிர்ப்பக்கத்திடம் உறவு கொண்டாடுவது, என்ற நடவடிக்கைகள் ஸ்ட்ரிங்கர் நாட்களில். நிலைமைக்கு ஏற்ற நடவடிக்கை! ஊர் இரண்டு பட்டது, கூத்தாடிக்குக் கொண்டாட்டம்! கொண்டாட்டத்தோடு முடியவில்லை, வியாபாரிக் கோலத்தோடு கூத்தாடத் தொடங்கி வைசிராய்க் கோலம் கொள்ளும் அளவுக்குக் கூத்து வளர்ந்தது! மேஜர் ஸ்ட்ரிங்கர் லாரன்சு, தன் நாட்களிலே இருந்த நிலைமைக்கேற்றபடி நடந்து ஆங்கில ஆதிக்கத்தைப் புகுத்தியதுடன், பிரெஞ்சு ஆதிக்கத்தைப் புகுத்தப் பாடுபட்ட, லாலி முதலிய பிரெஞ்சுத் தளபதிகளின் திட்டங்கள் தகர்க்கப்தடுவதற்கான முறைகளைக் கையாண்டார். அப்போதெல்லாம் "நமது இந்திய நண்பர்கள்"—"பழம் பெரும் பெருமை வாய்ந்த தேசம்"—"AB" என்ற வாசகங்களல்ல! சந்தா சாகிப்பை ஆதரிப்பதா? முகமதலியை ஆதரிப்பதா? பயல்கள் அடித்துக்கொண்டு சாகட்டும், பணம் என்ன தருகிறார்கள் என்று கேள்! இவை ஸ்ட்ரிங்கர் நாட்களிலே. என்ன நோக்கத்துக்காக, ஒரு வகையான நடவடிக்கை, அதாவது உள் நாட்டுச் சண்டையிலே ஸ்ட்ரிங்கர் நுழைந்தாரோ, அதே நோக்கத்துக்காகவே இன்றைய லாரன்சு, வேறோர் வகையான நடவடிக்கை அதாவது நமக்கு விடுதலை விருந்தளிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார். வேட்டுவிட்ட லாரன்சு, உறவு கொண்டாடும் லாரன்சு இருவருக்கும் இடையே முறை மாற்றம் இருக்கிறது. நோக்கம் மாறுபட்டதல்ல;

தங்கள் இலாபம், என்னவிதமாக நடந்துகொள்வதன்மூலம் வளரும், என்பதுதான் நோக்கம்.

ஸ்ட்ரிங்கர் நாட்களிலே, நடந்துகொண்ட முறையே, பிரிட்டிஷாருக்கு நெடுங்காலம் பயன்பட்டு வந்தது. அந்த அளவுக்கு இங்கு, உட்பிளவுகள் இருந்தன. ஒருவரை ஒருவர் வீழ்த்தச் சதி பல நடந்தன; இந்தச் சமயங்கள் பிரிட்டிஷ் ஆதிக்கம் வலுப்பதற்குப் பயன்பட்டன. ஒவ்வொரு சிற்ற ரசனும் பேரரசனுவதற்கு ஆசைப்பட்டான். அதற்காகச் சொந்த பலம் போதாததால், பிரிட்டிஷ் துணையையோ பிரெஞ்சுத் துணையையோ நாடினுன். வியாபாரம் செய்ய வந்த இடத்தில், இந்த 'வேட்டை' கிடைக்கவே பொன்தேடி வந்தவர்களுக்குப் பொன் விளையும் பூமி கிடைத்தது! சிற்றரசும் பேரரசும் சரியவே, வெள்ளையர் அரசு முளைத்தது.

இந்நிலையில் 1858-ல் புரட்சி மூண்டது. அப்போதும் சில லாரன்சுகள் இருந்தனர். அவர்களும், அந்த நிலைமைக் குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சந்தா சாகிப்பை ஆதரிப்பதா முகமதலியை ஆதரிப்பதா என்ப தல்ல அப்போதையப் பிரச்னை. தலை தப்புவது தம்பிரான் புண்யம் என்பார்களே, அது போன்ற நிலைமை. 'மக்களை அடக்கப் பட்டாளம், அந்தப் பட்டாளம் நமக்கு அடக்கம்' என்று மனப்பால் குடித்துவந்தனர் பிரிட்டிஷார். 1858 லேயோ மக்களல்ல, பட்டாளமே புரட்சியைத் துவக்கிற்று. பட்டாளத்திலேயும், இந்து, முஸ்லீம், இருவகையினரும் புரட்சி செய்தனர். புரட்சி பரவிற்று; பல்வேறு இடங்கட்கு! வெள்ளை மேல் அதிகாரிகள் விரண்டனர். எங்கும் தீ. எங்கும் போர் வெள்ளையர்களுக்குப் பல இடங்களிலே பேராபத்து. 'ஏன் வந்தோம் இங்கு' என்று பதைத்தழுதனர். ஊருக்குள் சிக்கிக்கொண்டு, தாக்குதலால் இடர்ப்பட்டவர்கள் பலர்! வெளியேறி வழியிலே தொல்லைப் பட்டவர்கள் வேறு. இங்ஙனம், புரட்சியின் போக்கு இருக்கவே, அன்றைய லாரன்சுகளுக்கு, எதிர்த்து அடிப்பது, இந்துவானுலும் முஸ்லீ மானுலும் சரி, இந்திய பூபாகத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை

எதிர்ப்பவன் யாராயிருந்தாலும், அவனை எதிர்ப்பது, அழிப்பது, என்ற நடவடிக்கையே சரி எனப்பட்டது அதற்கேற்ற படியே நடந்து கொண்டனர்.

அந்த மாபெரும் புரட்சிக் காலத்திலே மட்டற்ற கடுமையான நடவக்கைகளை மேற்கொண்டு, தாக்குதல் பல நடத்தி, விடுதலைக்காகப் போராடிய இந்து முஸ்லீம் அணிவகுப்பைப் பிளந்தெறிந்தவர்கள், ஹென்ரி லாரன்சு ஜான் லாரன்சு எனும் இரு சகோதரர்களாவர். ஹென்ரி லாரன்சு, லட்சுமண புரியில் இறந்தார், போராடுகையில் ஜான் லாரன்சு, மிகத் தைரியமாகப் போராடி, புரட்சிப் படைகளைப் பொசுக்கி, எதிர்ப்பை அழித்து, பாஞ்சாலப் பகுதியிலே குறிப்பாகவும், பொதுவாகவே வடநாட்டுப் பகுதியிலும், பிரிட்டிஷ் ஆட்சி மீண்டும் நிலை நாட்டப்படுவதற்கு வேலை செய்தார். இந்த லாரன்சுகள் காலத்திலே இனிப்பான பேச்சு, புன்னகை இவையல்ல; தீப்பொறிப் பேச்சும், எதிர்த்து அடக்குவதுமே, நடவடிக்கைகளாயின. ஏனெனில், அந்த நிலைமை அத்தகைய நடவடிக்கைகளைக் கொண்டே சமாளிக்கக்கூடியதாக இருந்தது பேரம் பேசுவது, பிளவுக்குள் நுழைந்து பார்ப்பது, இரு தரப்பினரில் ஒரு தரப்புக்கு உதவியாகச் செல்வது, அரச சபைகளிலே ஆலோசனையாளர்களாக அமருவது, அமளிக்கு ஆள் உதவி தந்து அதற்குப் பணம் பெறுவது, என்ற முறைகள் ஸ்ட்ரிங்கர் லாரன்சுக் காலத்தில் தேவைப்பட்டன. ஹென்ரி ஜான் லாரன்சுகள் காலத்திலேயோ, எதிர்த்துத் தாக்குவது, எங்கும் சென்று தாக்குவது. புரட்சிப் பொறியை அழிப்பது, எவராயினும் தாக்குவது என்ற போர் முறை தேவைப்பட்டது. இன்றைய பெதிக்லாரன்சுக்கு, இந்த முறைகள் தேவை இல்லை. புதிய முறை தேவைப்படுகிறது. புன்னகை தேவைப்படுகிறது. புன்னகைக்குக் காரணமும் இருக்கிறது. போராடிப் பெறவேண்டிய இலாபத்தைப் பார்த்தாகிவிட்டது. இனி இலாபம், போராடுவதினல் இல்லை, ஆட்சி செய்வதாலும் இல்லை; ஆட்சியை அவர்களிடமே ஒப்படைத்துவிட்டு, அதனுல் ஏற்படும்

சங்கடங்களைச் சற்று அருகேயே இருந்து கவனித்துக்கொண்டிருந்துகொண்டு, சமயமும் அழைப்பும் கிடைத்ததும், உள்ளே நுழைவது; அத்தகைய சமயம் கிடைக்காவிட்டாலும், புதிய உறவு கொண்டாடுவது; அதன்மூலம், இலாபத்தை நோகாமல் பெறுவது, என்ற புதிய முறை பெதிக்லாரன்சு நாட்களிலே, தேவைப்படுகிறது.

மூலநோக்கம் ஒன்றுதான் என்பதை இநத நாலு லாரன்சுகளின் நடவடிக்கைகளிலிருந்தும் அறிகிறோம். எனவே இன்றைய நடவடிக்கைக்கும் காரணம் நம்மிடம் பயந்து அல்ல; நம்மிடம் திடீரென்று ஏற்பட்ட அன்பு அல்ல; திடீரென்று சர்வதேச தர்மத்தின் மீது அக்கரை ஏற்பட்டுவிட்டதும் அல்ல; இன்றைய நிலைமையில், இத்தகைய நடவடிக்கை எடுப்பதுதான், இதற்கு முன் எந்த நோக்கத்துக்காக வேறு பல நடவடிக்கைகளை எடுத்தார்களோ அதே நோக்கத்துக்குத் தேவைப்படுகிறது. **நிலைமைக்கேற்ற!! நடவடிக்கை—ஆனால் மூல நோக்கத்துக்குக் கேடு வராத முறையில்!** இது இப்போதுள்ள கொள்கை.

பிரபுக்கள் சபையிலே பலர் குறுக்குக் கேள்விகள் போட்டபோது பெதிக்லாரன்சு ஒரு பதிலுரைத்தார்—பிரிட்டிஷாரின் பண்புக்கு பெரியதோர் எடுத்துக்காட்டாக!

"அதிகமாக விஷயங்களைக் கூறும்படி வற்புறுத்தாதீர்கள். இங்கே பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையும் இந்தியாவிலே போய்ச் சேரும்!" என்றார்.

என்ன பொருள் அதற்கு? நமது காதிலே படக்கூடாதாம் பல வார்த்தைகள்! மூடு மந்திரம் தேவைப்படுகிறது. அந்த மூடு மந்திர விளக்கந்தான் நாம் மேலே விளக்கினோம். பெதிக்லாரன்சு, மனம் திறந்து பேசி இருந்தால், இதைத்தான் கூறி இருப்பார்,—எல்லாம் பிரிட்டிஷ் நன்மைக்குத்தான் இந்தப் புதிய ஏற்பாடு! நான் பித்தனல்ல—பிரிட்டி

ஷாண்தான்! என் நடவடிக்கையின் விளைவு பொறுத்திருந்தால் தெரியும்,—இது பேசாதது—பெதிக் இவ்வளவையும் உணரச் செய்வதற்கே வெகு பாடுபட்டார் பிரபுக்கள் சபையிலே.

இந்திய பூபாகத்தைப்பற்றிய பிரச்னை வந்தபோதெல்லாம், இங்குள்ள சிக்கல்களை, பேதங்களைக் காரணம் காட்டினர்—இவ்வளவு தொல்லை தீர்க்கப்படவேண்டுமே என்றன.

உலக வல்லரசுகளுக்கிடையே மோதுதல் ஏற்பட்டபோதெல்லாம், ஒரு அரசின் போக்கை மற்ருேர் அரசு கண்டிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதிலே அதிக கண்டனத்துக்கு ஆளானது பிரிட்டன்—ஏனெனில் பிரிட்டனிடமே இந்த நாடு பிடிக்கும் குற்றம் அதிகம், அப்போதெல்லாம், " இந்தியாவிலே உள்ள இந்து முஸ்லீம் போன்ற பிணக்குகள் தீரவேண்டுமே, தன்னுட்சிக்கு அப்போதுதானே தகுதி பெற முடியும்" என்று பிரிட்டன் கூறிவந்தது. பல நாட்கள் இந்தப் பல்லவி இருந்தது! இதிலிருந்து தப்புவதற்காக இந்திய பூபாகத்துத் தலைவர்கள், " பிரிட்டன், ஒரு தேதியைக் குறிப்பிட்டு, இந்தத் தேதிக்குப் பிறகு நாம் இந்தியாவில் இருக்கமாட்டோம்: போய்விடுகிருேம் என்று அறிவித்துவிட வேண்டும். அப்படி அறிவித்துவிட்டால், இங்குள்ள பேதமும் பிளவும் ஒழிந்தே போகும்; ஒற்றுமை மலரும்"—என்று பேசினர். இந்தப் பேச்சுக்கு உலக மன்றங்களிலே செல்வாக்கு ஏறக் கொஞ்சம் நாளாயிற்று—இப்போது ஏற்பட்டுவிட்டது. ஏற்பட்டுவிடவே, பிரிட்டனும் புதுப் பாட்டு துவக்கிவிட்டது.

" நாங்கள் நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் வெளியேறிவிடுவோம் என்று தெரியாததாலா, உங்களுக்குள் உள்ள தகராறுகளைப் போக்கிக்கொள்ள முடியவில்லை! அந்தப் பழி ஏன் எங்கள் மீது சுமத்துகிறீர்கள். நாங்கள் நாள் குறித்துவிடுகிருேம் வெளி ஏற, நீங்கள் அதற்குள் மகராஜர்

களாக ஒற்றுமைப்பட்டுவிடுங்கள்—உங்கள் நாட்டை நீங்களே ஆளத் திட்டம் வகுத்துக் கொள்ளுங்கள்'' என்று பிரிட்டன் பேசுகிறது. இது நமக்கு அளிக்கும பதிலல்ல! உலக வல்லரசுகளின், 'ஜாடை மாடையாக'ப் பேசும் பேச்சுக்கு பிரிட்டன் அளிக்கும் பதில். 'தேதி கூடக் குறித்து விட்டோம் வெளியேற, இனி எங்கள் மீது என்ன குறை!' என்று நாளை யத்தினம் உலக அற மன்றங்களிலே பெருமிதத்துடன் பேச விரும்புகிறது பிரிட்டன்.

"வெளி ஏறிவிட்டால், இந்திய பாதுகாப்பு எப்படி?"

"அது இந்தியரின் பொறுப்பு; ஆனால் அதிலே நமக்கு விசேஷ அக்கரை உண்டு"

"பிரிட்டிஷ் படைகளும் வெளி ஏறிவிடுமல்லவா?"

"ஆமாம்! நிச்சயமாக!"

"எதிரி நாடுகள் ஏதாவது இந்தியாவைத் தாக்கினால், சமாளிக்கக்கூடிய படை பலம் இந்தியாவுக்கு இருக்கிறதா?"

"இந்தியா, உலகிலே பழப் பெருமை வாய்ந்த ஒரு துணைக்கண்டம். ஆற்றலுள்ள மக்கள் 40 கோடி பேர் உள்ளனர். இந்திய வீரர்கள் காட்டிய வீரம், இந்தச் சண்டையின்போது அபாரம்................"

"வர்ணனை இருக்கட்டுமய்யா! தரைப் படை, கடற் படை, விமானப் படை, நவீன போர்க் கருவிகள் ஆகியவை முறைப்படி அமைத்துள்ளனவா?"

"அமைத்துக்கொள்ள முடியும்!"

"இப்போதுள்ள நிலைமை?"

"தெரிந்ததுதானே!"

"இந்நிலையில் வேறு நாடு தாக்கினால்?"

" சிரமம்தான் ! விடுதலை விடா உழைப்பின் மூலமாகத் தானே நிலைநிறுத்தக்கூடியது."

" போதனை இருக்கட்டும். என்ன நேரிடும் ? "

" இந்தியாவை இன்றைய நிலையில் வல்லரசு ஏதேனும் எதிர்த்தால் கஷ்டந்தான். ஆனுல், இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே அங்கம் வகிக்க இசைந்தால், இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் மகிழ்ச்சியோடு மேற்கொள்வோம்."

" சாம்ராஜ்யத்தில் சேராவிட்டால்............? "

" இந்தியாவுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டால், அனுதாபத்துடன் கவனிப்போம்—இந்தியாவின் ஆபத்து, பிறகு ஆசியாவுக்குத் தொல்லையாகி, பிறகு உலகச் சமராகவே மாறிவிடக்கூடுமாகையால், உலகிலே சாந்தியும் சமாதானமும் நிலவவேண்டும் என்பதிலே மிக்க அக்கறை கொண்ட நாம், இந்தியாவின் எதிர்காலத்தைக் கூர்ந்து கவனித்தாக வேண்டும்."

இப்படிப் பேசுகின்றனர் பிரிட்டிஷ் பிரபலஸ்தர்கள், சகல கட்சியினரும்.

அதாவது **போய்விடுகிறேம்** என்று பேசும்போதே, புது உறவுக்கும் வழி செய்துகொள்கிருர்கள் : உலகச் சூழ்நிலையையும், இந்திய உபகண்டத்திலே படை பலம், தக்க முறையிலே இன்னமும் அமையவில்லை என்பதையும் சுட்டிக் காட்டி ! புது உறவு ஏற்படுத்திக் கொண்டாகவேண்டும் என்று நமக்குக் கூறுவதுடன் உலக சமாதானத்துக்கு இது அவசியமான காரியம் என்றும் உயர்வான தத்துவம் பேசி, மற்ற வல்லரசுகளின் வாயையும் மூடிவிடுகிருர்கள்.

இதுமட்டுமா ! இந்தியாவிலேதான் ஐ ந் நூ ற் று ச் சொச்சம்' அரசர்கள் வாழ்கிருர்களே ! ஆறு குதிரையும்,

அறுபது தேவியரும், நாற்பது நாட்டிய ராணிகளும், எண்பது கிராமங்களும் கொண்ட குட்டிக் கோலாகல மன்னன் முதற்கொண்டு ஹைதராபாத் நிஜாம் வரையிலே, தரம் தரமாக, ஐந்நூறுக்கு மேல் உள்ளனர் ராஜாக்கள்! பிரிட்டிஷ் இந்தியா—சுதேச இந்தியா – என்று இருவகை யாக நெடுநாட்களாகப் பிரித்தே வைத்துள்ளனர். ஆகை யினால்தானே இங்கு, கவர்னர் ஜெனரல் அண்டு வைசிராய் என்று பதவி இருக்கவேண்டி நேரிடுகிறது.

இப்போது போய்விடுகிறோம் என்று பிரிட்டிஷார் கூறுவது, பிரிட்டிஷ் இந்தியாவுக்கு—சுதேச இந்தியாவுக்கு அல்ல! ராஜாதி ராஜாக்கள், தத்தமது ராஜ்யங்களிலே இருப்பார்கள் என்பது மட்டுமல்ல, அவர்களிடம் விடை பெற்றுக்கொள்ளவில்லை பிரிட்டிஷார்.

பெங்களூர் கன்டோன்மெண்ட்டிலே, 'போய் வரு கிறோம்' என்று பேசுகிறார்கள் பிரிட்டிஷார், பெங்களூர் சிடியில் தங்குவது இதனால் தடுக்கப்படுவதில்லை. காரைக் குடியிலிருந்து வெளி ஏறி, புதுக்கோட்டையில் விடுதி அமைத் துக்கொள்ளவும், ஆந்திரத்திலிருந்து வெளியே கிளம்பி ஹைதராபாத்தில் தங்கவும் இனி முடியும் இந்திய பூபாகத் திலுள்ள ஐந்நூற்றுச் சொச்சம் சுதேச சமஸ்தானங்களில் அவர்கள் தங்கி இருக்கவும், ஆதிக்கம் செலுத்தவும் முடியும். சுதேச சமஸ்தானங்களோடு பிரிட்டிஷார் தனியாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதை, இப்போது 1948ல் வெளியே போய்விடுகிறோம் என்று பேசியது, எந்த விதத்தி லும் கட்டுப்படுத்தாது.

சுதேச சமஸ்தானங்களிலே எல்லாவற்றிலும் 'பிரிட்டிஷ் முகாம்' இருக்கும் என்றல்ல பொருள்; அவற்றிலே சில, தனித்து இருக்கவும் முயலும். ஹைதராபாத் இத்தகைய எண்ணம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. வேறு சில 'சமஸ்தானங்கள்' இங்கு அமைக்கப்படும் மக்களாட்சி களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயலும். வேறு

பல சமஸ்தானங்கள் பிரிட்டிஷாருடன் தொடர்பு கொண்டிருக்கும். அதாவது, தத்தமது விருப்பப்படி, தமது எதிர் காலத்தை அமைத்துக் கொள்ள இந்தச் சுதேச சமஸ்தானங்களுக்கு உரிமை இருக்கிறது. இதுபற்றி, மேலால் பேச, பிரிட்டிஷார் அந்த சமஸ்தானங்களுடன், நேரடியாக முயற்சி செய்வர்.

தங்குமிடங்கள் தர, தர்பார் சுந்திரர்களைத் துணை கொள்ள முடியும் என்பதுமட்டுமல்ல, தங்கப்போவதில்லை என்று எந்தெந்தப் பகுதிகளைக் குறித்துக் கூறுகின்றனரோ, அந்தந்தப் பகுதிகளிலும், அரசாளும் உரிமையை இழக்கப் போவதாக தெரிவிக்கின்றனரே தவிர, அங்குள்ள வியாபாரத் தொடர்புக்களை அல்ல! அந்த வியாபாரத் தொடர்புகள் சாமான்ய மும்மல்ல! கொழுத்த இலாபம் தரக்கூடிய தொடர்புகள். அந்தத் தொடர்புகளை, "அரசாளும் தொடர்பு" கெடுத்து விடுகிறது—கவர்னராகவும் கவர்னர் ஜனரலாகவும் இருக்கும் துரைமார்கள், அரசாள்வதற்காக எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள், கம்பெனி டைரெக்டராக வரும் துரைமார்களின் இலாபத்தைக் கெடுக்கிறது. எனவேதான், "ஆளும் வேலையை விட்டுத் தொலைப்போம், நமது வியாபார வேலையைக் கவனிப்போம்—அதிலேதான் பசை இருக்கிறது" என்று பிரிட்டிஷார் தீர்மானித்துவிட்டனர். "கடைக்காரர் கூட்டம்" என்று ஒரு முறை நெப்போலியன் பிரிட்டிஷாரைக் கேலியாகப் பேசினுர். அந்தக் கேலி மொழியிலே, உண்மை போதிந்திருக்கிறது. இந்தியாவை ஆள்கிறுர்கள்! பெரிய உபகண்டத்தை ஆள்கிறுர்கள்! என்று உலகின் பொறுமையும் ஒருபுறம் தாங்கிக்கொண்டு, மற்றோர் புறத்தில் விடுதலை வேண்டும், அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும் என்று இங்குக் கிளம்பும் எதிர்ப்பையும் அடக்கிக்கொண்டு, அடக்கும்போது புதிதாக ஏற்படும் கெட்ட பெயரையும் தாங்கிக் கொண்டு, இவ்வளவு சங்கடத்துக்கும் இடையே வியாபார காரியத்தையும் கவனித்துக்கொண்டு இலாபம் திரட்ட

வேண்டுமானால், செலவு அதிகமாகி வரவு குறைகிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கு. எனவேதான், புதிய நடவடிக்கை புன்னகையுடன் ஆரம்பமாகிறது.

சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் பேசி இருக்கிறார் இந்தக் கிழமை, இனியும் பிரிட்டிஷார் இந்தியாவில் இருக்கமுடியாது. இருப்பது என்று தீர்மானித்தால் இருபது ஆண்டுகள் தங்கியிருக்கவேண்டும். இப்போதுள்ளதைவிட அதிகமான பிரிட்டிஸ் படைகளையும் பிரிட்டிஷ் அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு ஆட்சியை நடத்தவேண்டும். இந்தியாவில் இவ்வளவு ஆண்டுகள் தங்கி இருக்க பிரிட்டிஷ் படையினர் விரும்பவும் மாட்டார்கள்; பிரிட்டனில் உள்ள கட்சிகளும் சம்மதிக்கா. எனவே நாள் குறித்துவிட்டு நாம் வெளியேறுவதே சிறந்த முறை என்று பேசினார்.

இந்த வார்த்தைகளிலே புதைந்துள்ள இலாப நஷ்டக் கணக்கு இருக்கிறதே, அதனைத்தான் நாம் விளக்கிக் காட்டினோம் முற்பகுதியில். ஆட்சி, செலவும் சிரமமும் தருகிறது. ஆட்சியை விட்டுவிட்டு நேசம் கொண்டாடினால், செலவு குறைகிறது, அதே போது வரவு அதிகரிக்கிறது. இதனை மேலும் விளக்க, புள்ளி விவரங்களைக் குவிக்கலாம்; தேவையில்லை. பொதுவான சில உண்மைகளைக் காட்டினாலே போதும் என்று கருதுகிறோம். பிரிட்டிஷார் பெருத்த இலாபம் திரட்டியது ஆடை, இரும்பு, போன்ற பெரிய தொழில்களிலே. முதிய வயதினரான காங்கிரசாருக்கு நினைவிலிருக்கும், அந்தக்காலத்துக் காங்கிரஸ் மேடைப் பேச்சு—''லங்காஷயர், ஷெப்பீல்டு எனும் இடங்களிலே இந்தியாவின் நவரத்தினங்கள் போய்க் குவிந்துவிடுகின்றன; கொள்ளை போகிறது நமது செல்வம், கொடிகட்டி ஆள்கிறான் பரங்கி, கோவணாண்டியானான் நமது தேசத்தான்'' — இவ்விதம் முழக்கமிட்டனர். லங்காஷயர் நெசவாலை நகர்—ஷெப்பீல்டு இரும்பாலை நகரம்—இந்த இரு தொழில்கள் மூலம், பிரிட்டிஷ்பிடி இந்தியாவிலே, மிக மிக அழுத்தமாக இருந்தது.

இருபிடியும் நிலைத்திருக்கச் செய்வதற்கே ஆட்சி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டது. இப்போது அந்தப்பிடியே இல்லை ! எனவே அதைக் காக்கும் கருவி தேவைப்படவில்லை ! குதிரை பறிபோன பிறகு, கொட்டில் எதற்கு? அதைக் குப்பை கூட்டிக்கொண்டும், பூட்டி வைத்துக்கொண்டும் இருப்பானேன் ? லங்காஷயருக்கு இருந்த "யோகம்" இன்று பிர்லா, பஜாஜுக்குப் போய்ச்சேர்ந்து விட்டது. ஷெப்பீல்டுக்குச் சென்றுகொண்டிருந்த பணம், டாடாவுக்கு வருகிறது ! எனவே, லண்டனில், 'அரசியல் பிடி' வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதனுல் இலாபம் இல்லை. அந்த வடநாட்டுக்காரருக்கு வந்துள்ள "வியாபார இலாபம்" — இனி நாட்டு அமைதியைப் பொறுத்திருக்கிறது. அந்த அமைதியை நாம் சிரமப்பட்டுக் காத்துக் கொடுப்பானேன் என்ற எண்ணம், இன்றைய லாரன்சுகளுக்குத் தோன்றுவதிலே ஆச்சரியமென்ன ? .எனவேதான் போகிறேன் என்கின்றனர்.

கவர்னரும் கவர்னர் ஜெனரலும் போய்விடுவார்கள்; கர்னலும் மேஜரும் சுதேச சமஸ்தானங்களில் கொலுவீற்றிருப்பார்கள் காட்டனும் பேடனும் கம்பெனி நிர்வாகிகளாக இலாபத்தைத் திரட்டியபடி இருப்பார்கள். அரசியல் ஏகாதிபத்யம் தானுக, காலத்தால் கலனுகிறது, பொருளாதார ஏகாதிபத்யம் புதுஉருவில் புதிய முறையில் வருகிறது. போகிறேம் வெளியே! என்பதன் உண்மைப் பொருள் இதுதான். வேவல் போகிறார், ஆனுல் ஷோன் வருகிறார். மிஸ்டர் T. A. ஷோன் பிரிட்டிஷ் ஹைகமிஷனர். இவரது வருகை, இந்திய—பிரிட்டிஷ் புது உறவின் அறிகுறி. அந்தப் புது உறவு, பொருளாதார உருவில் இருக்கும். வியாபார இலாபம், அதன் நோக்கம் வேவல் போயாக வேண்டும் ஷோன் போன்றுரின் பிடி இந்திய பூபாகத்திலே பலப்படவேண்டுமானுல் போகிறேன் வெளியே என்று வெள்ளையர் கூறுவது அன்பின் வெற்றியுமல்ல, வீரர் சிந்திய இரத்தத்தின் பலனும் அல்ல, பிரிட்டிஷ் பரம்பரைப்

பண்பு. வாரன்சுகள் பலராஞலும் லட்சியம் ஒன்றுதான் என்பதன் எடுத்துக்காட்டு. நிலைமைக்கேற்ற நடவடிக்கை எடுப்பதில் பிரிட்டிஷார் கைதேர்ந்தவர்கள் என்பதற்கு முக்கியமான எடுத்துக்காட்டு. அவர்கள் விஷயம் கிடக் கட்டும். நம்மவர்கள் விஷயம் என்ன; இந்திய பூபாகத்த வரின் போக்கு எப்படி இருக்கவேண்டும்! மகிழ்ச்சியா, மருட்சியா? என்ன மனேநிலை நமக்கு?

துண்டுஸ்தான் திட்டம்

'இறுதிப் போரட்டம் என்று பலபேர் எத்தனையோ முறை பேசி இருக்கிறார்கள். ஏகாதிபத்யம் ஏற்கனவே செத்துவிட்டதே. செத்தபாம்பை அடிக்கத் தயாராவதில் என்ன பிரயோஜனம்?'

பாட்னாவில், கிருபளானி
17—2—47.

"அடுத்த போராட்டம் பொதுமக்களின் ஏகோபித்த போராட்டமாக இருக்கும். அதை விவசாயிகளும் தொழிலாளர்களும்தான் முன்னின்று நடத்துவார்கள். கடைசியாக ஒரு போராட்டம் நடத்தினால்தான் இந்தியா சுதந்திரம் அடையும் என்று நான் நம்புகிறேன்."

ஜாரியாவில் ஆச்சார்ய நரேந்திரதேவ்.

"சுதந்திர வாசல் திறந்துவிட்டது, நம்முடைய அரசியல், பொருளாதார துறைகளில் இப்போதே பெரும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன மேற்கொண்டு பெரிய மாறுதல்களும் உருவாகி வருகின்றன, இத்தகைய நெருக்கடியான தருணத்தில் மாணவர்கள் தத்தம் பொறுப்பை உணர்ந்து சமுதாயத்தைப் புதிய முறையில் சீர்திருத்துவதற்குரிய சேவைகளைச் செய்யத் தங்களைத் தயார் செய்துகொள்ளவேண்டும்."

புதுடில்லியில், மௌலானா ஆஜாத்
21—2—47.

"பிரிட்டிஷாரின் சூழ்ச்சி இன்று வெளிப்பட்டுவிட்டது. அரசியல் நிர்ணய சபை வேலைகளை விட்டுவிட்டு காங்கிரஸ் ஒரு புரட்சிகரமான போராட்டத்தை ஆரம்பிக்க இன்னும் காலங்கடந்துவிடவில்லை.

இறுதிப் போராட்டத்திற்குத் தயார் செய்துகொண்டு, தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களுடைய பலத்தை ஒன்று திரட்டவேண்டும். இதுதான் மாணவர்களின் முக்கிய கடமை."

கரன்பூர், ரூய்க்கர்,
21—2—47.

போர் இல்லை என்கிறார் கிருபளானி! அடுத்த போருக்குப் படை திரட்டச் சொல்கிறார் ஆச்சார்ய நரேந்திரதேவ்!

யார் கூறுவது சரி? இருவரும் செல்வாக்குள்ள தலைவர்கள்! இருவருக்குள் இவ்வளவு முரண்பாடு இருக்கும்போது, பொது மக்கள் மனம் குழம்பாமல் எப்படி இருக்க முடியும்?

மௌலானா ஆஜாத் கூறுகிறார், சுயராஜ்யம் கிடைத்து விட்டது என்று. அதெல்லாமில்லை, பிரிட்டிஷார் புதிய சூது செய்கிறார்கள் என்கிறார் ரூய்க்கர் எனும் தலைவர்! யார் கூறுவதை ஏற்றுக்கொள்வது?

இவ்விதமான சிக்கலும் குழப்பமும் திகைப்புமே இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. களிப்பூட்ட வேண்டிய கட்டமாக இல்லை, கலக்கமூட்டுவதாக இருக்கிறது. போகிறேன் என்கிறது ஏகாதிபத்யம்! புரியவில்லையே, போன பிறகு இங்கு என்ன நேரிடும் என்று. பொழுது புலர்ந்தது என்று பொருளா? போர் மூண்டது என்று ஏற்படுமா? தலைவர்களோ ஆளுக்கொரு பேச்சுப் பேசுகிறார்கள். கலகம், பலாத்காரம் ஆகியவற்றை அவர்கள் பலமாகக் கண்டிக்கிறார்கள் ஆனால் கலகமோ நித்ய நிகழ்ச்சியாகிவிட்டது. தீ தெரிகிறது

எங்கும்! பிணம் கீழே வீழ்கிறது! பிளவு பெருகுகிறது! அமைதி இல்லை! இந்நிலையில்தான் "ஆகட்டும், ஆகட்டும், சீக்கிரமாக ஒரு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள், நாங்கள் வெளியேறப் போகிறோம்" என்று ஏகாதிபத்யம் கூறுகிறது. ஏற்பாடு எவ்விதம் இருக்கிறது?

பாகிஸ்தானுக்குப் பாதகம் விளையக்கூடிய எந்தத் திட்டத்தையும் ஏற்கமாட்டோம் என்று லீக் கூறுகிறது.

இரண்டு நூற்றாண்டுகளாகப் பிரிட்டிஷ் பிடியில் இருந்தோம், இனி அது விலகப் போகிறது, விலகுகிறபோது, நமக்குள் வீண் தகராறு வளர்த்துக்கொண்டு வல்லரசுகள் மீண்டும் மோப்பம் பிடித்துக்கொண்டுவர இடமளிக்கக் கூடாது; எனவே, சரியோ தவறோ, தேவையோ அல்லவோ, லீக் கேட்கும் கோரிக்கையை ஒப்புக்கொண்டு, பிறகு, ஒன்று கூடி வாழ்ந்தால், ஓரரசு இருந்தால் ஏற்படக்கூடிய நலன்களை விளக்கி, அவர்களாகவே இசையும்படி செய்வோம் என்று காங்கிரஸ் எண்ணவில்லை. பாகிஸ்தானை மறுக்கிறது.

இரு கட்சிகளின் பிடிவாதத்தின் பலன் என்ன? 1946-ல் மட்டும் 12400 பிணங்கள்! வகுப்புக் கலவர விளைவுகள்! சொத்து நாசம் ஏராளம்.

பிரிட்டிஷ் படைகள் பவனி வரவும், இராணுவச் சட்டம் பிறப்பிக்கவும் வசதி இருக்கும் இந்த நாட்களிலே இந்தக் கோர நிலைமை என்றால், 1948 ஜூனுக்குப் பிறகு என்ன ஆகுமோ என்று எண்ணும் எவரும் திகைப்படைவர், நிலைமை அவ்விதமாகிவிட்டது.

1948-ல் பிரிட்டிஷார் வெளியேறினதும், சிந்துவைத் தனி மண்டலம் என்று அறிவித்துவிட வேண்டும் என்கிறார் கல்வி மந்திரி பீர் இலாஹிபக்ஷ். பிரிட்டிஷார் வெளியேறினதும் ஒவ்வொரு திட்டமும் அமுலுக்கு வருவதென்பது, அவ்வப்போது அமையும் பலாபலத்தைப் பொறுத்திருக்கும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

34641

'முஸ்லீம்களுக்குத் தனி ராஜ்யமா வேண்டும்? அப்படியானல் பல்வேறு இந்து மெஜாரிடி மாகாணங்களில் உள்ள முஸ்லீம்களெல்லாம், பாகிஸ்தான் சென்று குடியேறி விடட்டுமே' என்று கேலிக்குச் சொன்ன வார்த்தை இப்போது லீகுக்கு ஒரு வகையான வேலைத்திட்டமாகவே ஆகிவிட்டது.

'அறுபதினுயிரம் ஏக்கர் அயன் நிலமிருக்கிறது. இதனைப் பயிரிட்டுப் பிழைக்கலாம். தங்க இடமும் வசதியும் தருகிறேம். உதவிக்குக் கடன் தருகிறேம், கடனை மெள்ளத் திருப்பித் தரலாம், வருக! வந்து குடி ஏறுக!!'—என்று, பீகார்வாழ் முஸ்லீம்களைச் சிந்து மந்திரி ஜுனுப் குர்ரோ அழைக்கிருர். பீகாரிலிருந்து ஏற்கனவே முஸ்லீம்கள் அனேகர், வங்கம் சென்று தங்குகின்றனர்—வங்க சர்க்காரும் இதற்காகப் பொருள் செலவிடுகிறது. இது போன்றே நவகாளிப் பகுதியிலிருந்து, இந்துக்கள் வெளியேறினர். அதாவது முஸ்லீம்களோடு சேர்ந்து வாழ முஸ்லீம்களும், இந்துக்களோடு சேர்ந்து வாழ இந்துக்களும், தாங்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் இடங்களையும்விட்டுச்சென்றுவிடத் துணிந்துவிட்டனர். இரு இன வட்டங்கள் அமைந்து வருகின்றன.

'நாட்டைத் துண்டுபோடும் நாசத் திட்டத்துக்கு நாங்கள் ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம். எங்கும் யாரும் கேள்விப்படாததாக இருக்கிறது, இந்தத் தனி ராஜ்யம் கேட்கும் முறை! யார் ஒப்புக்கொள்வார் இதற்கு? பாரத மாதாவை வெட்டுவதா? பசுவை அறுப்பதா? குழந்தையைக் கூறு போடுவதா?' என்று கோபமும் சோகமும் கொண்டு பேசி வந்த காங்கிரஸ், சென்ற கிழமை, காரியக்கமிட்டியிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. என்ன தீர்மானம்? நம்பமுடியாதது! காங்கிரசிடமிருந்து யாரும் இதுபோன்ற தீர்மானம் வரக்கூடுமென்று எதிர்பார்த்துமிருக்கமாட்டார்கள்.

" பஞ்சாப் மாகாணத்தை இரண்டு துண்டுகளாக்க வேண்டும் "

காங்கிரஸ் காரியக்கமிட்டி கூறுகிறது. இதுபோல! பரந்த இந்தியப் பூபாகத்தில், கிழக்கு மேற்காகவும், வடக்குத் தெற்காகவும் ஆயிரத்துக்கு அதிகப்பட்ட மைல்கள் உள்ள துணைக் கண்டத்தை, ஒரே குடைக்கீழ் அரசு செலுத்துவதென்பது சரியுமல்ல; முறையுமல்ல. திறமையாகவும் இருக்காது. ஆகவே இந்தியப் பூபாகத்தை, ஒரே அரசு என்று கூறுமல், எந்தெந்தப் பூபாகத்திலே, எந்த இனம் மொத்தத்திலே பெருவாரியாக இருக்கிறதோ, அந்த இனத்தவரின் அரசாக அமைக்கவேண்டும். அம்முறையிலே கவனிக்கும்போது, வடமேற்கு எல்லைப்புறம், பஞ்சாப், சிந்து, பெலுசிஸ்தானம், வங்காளம், அசாம் இந்தப் பகுதிகள் கொண்ட பூபாகத்தில். முஸ்லீம்கள் பெருவாரியாக உள்ளனர். ஆகவே, இதனைப் " பாகிஸ்தான் " ஆக்கவேண்டும் என்று ஜனுப் ஜின்னு கேட்டார். அவர் கேட்கும் பாகிஸ்தானுவது: இரண்டு தனிப் பிரதேசங்கள். மேற்கே ஒரு பிரதேசம்; கிழக்கே ஒன்று. இரண்டுக்கும் இடையே ஒரு தாழ்வாரம் தேவைப்படும், ஒன்ருக வாழ. நாம் கேட்கும் ' திராவிடநாட்டு 'க்கு, இந்தச் சங்கடமும் கிடையாது. இயற்கையின் எல்லைக் கோடாக விந்தியம் அமைந்திருக்கிறது. இவ்வண்ணம் இன அரசு கேட்ட காலை, சபித்தவர்கள் காங்கிரசார். இதுபோது அவர்கள் பரந்த பூபாகத்திலே கூட அல்ல, அதிலே உள்ள ஒரு மாகாணமாகிய பஞ்சாப், இரண்டாக்கப்படவேண்டும் என்கிருர்கள். ஒரு மாகாணத்தைக்கூட இரண்டு துண்டுகளாக்கலாம். அவசியம் ஏற்பட்டால் என்பது இதிலிருந்து தெரிகிறது. இது, காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளும் முறையாகிவிட்டது என்பதும் விளங்குகிறது பஞ்சாப்பை, வசதியையோ உரிமை உணர்ச்சியையோ, பாதுகாப்பையோ முன்னிட்டுப் பிரித்து விடுவது அவசியம் என்று காங்கிரஸ் கருதுகிறது என்ருல், அதுபோன்ற அல்லது வேறு சில காரணங்களுக்

காக, இந்தியாவிலே இன அரசுகள் அமையும் விதத்திலே, பிரிவுகள் ஏற்படவேண்டும் என்ற திட்டம், மிக மிகப் பொருத்தமானது என்பது ஏற்படவில்லையா ?

பாரத்வர்ஷத்தின்மீது ஆணையிட்டுக், காங்கிரஸ் பேசி வந்தகாலம் ஒன்று இருந்தது. வங்காளத்தை இரண்டாக்க வேண்டுமென்று பிரிட்டிஷார் ஒரு திட்டம் போட்டபோது, வங்காளப்பிரிவினையை எதிர்த்துக் காங்கிரஸ் போராடிய காலம் ஒன்று இருந்தது. 'நாடு முழுவதையும் ஜனாப் ஜின்னாவே வேண்டுமானாலும் ஆளட்டும்: நாட்டைக் கூறு போடும் நாசவேலை மட்டும் வேண்டாம்' என்று நல்லுரை கூறிவந்த நாட்கள் போய்விட்டன. நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை எதிர்த்தவர்கள், இன்று ஒரு மாகாணத்தை இரண்டு துண்டாக்க வேண்டுமென்கிறார்கள் ! எவ்வளவு அற்புதமான மனமாற்றம் ! !

பாஞ்சாலத்தை, இந்துவும் சீக்கியரும் பெருவாரியாக வாழும் பாஞ்சாலப் பகுதி என்றும், முஸ்லீம்கள் பெருவாரியாக வாழும் பகுதி என்றும் இரண்டு தனித் துண்டுகளாக்கினால்தான், இந்து சீக்கிய மக்கள் சுகமாக வாழமுடியுமாம். பாஞ்சாலம் ஒரே மாகாணமாக இருக்குமானால், அங்கு முஸ்லீம் ஆட்சிதான் மெஜாரடி முறைப்படி இருக்கும். அந்த ஆட்சியின்கீழ், சீக்கியரும் இந்துக்களும் இருக்க முடியாது. இடர் நேரிடும். எனவே, சீக்கியரும் இந்துவும் மெஜாரடியாக உள்ள பகுதியைத், தனியாக்கி விடவேண்டும் என்கிறது காரியக் கமிட்டி ! பஞ்சாபிலே நடைபெறும் வகுப்புக் கலவரத்தை, இதற்குக் காரணமாகக் காட்டுகிறது கமிட்டி. ஜனாப் ஜின்னா, உள்ளூரச் சிரித்துக்கொண்டிருப்பார், பாகிஸ்தானை எதிர்த்தவர்கள் இப்போது துண்டுஸ்தானகள் கேட்கும் அளவுக்கு முன் வந்துவிட்டது கண்டு ! சில ஜில்லாக்கள், பஞ்சாபில், இந்து சீக்கியர்கள் பெருவாரியாக உள்ள இடம். சட்லஜ் நதியின் இருகரைகளில், இப்பக்கம் இந்துவும் சீக்கியர்களும் பெருவாரியாக உள்ளனர்; அப்பக்கம் முஸ்லீம்கள் உள்ளனர்.

கர்கான்	குருதாஸ்பூர்
ஹிசார்	ஹோஷியார்பூர்
பிரோஸ்பூர்	கங்கரா
லூதியாஞு	அம்பாலா
ஜலந்தர்	கர்ஞல்
அமிர்தசரஸ்	ரோடாக்

என்ற ஜில்லாக்களில், பஞ்சாபில், இந்துக்கள் பெருவாரியாக உள்ளனர். இவ்விடங்களைப் பஞ்சாபிலிருந்து பிரித்து, ஐக்கியமாகாணத்துடன் சேர்த்து விடுவது என்பது காங்கிரசின் திட்டம். இந்த ஜில்லாக்களிலே உள்ள இந்துக்களை, பஞ்சாபில் அமையக்கூடிய லீக்மந்திரிசபையிலே விட்டுவைக்க முடியாது என்று காங்கிரஸ் கூறுகிறது.

அதாவது பஞ்சாபில், லீக்மந்திரிசபைதான் அமையும் என்பதைக் காங்கிரசே ஏற்றுக்கொண்டு விட்டது. முன்பு சொன்னது வேறு. பஞ்சாபிலே லீகுக்குச் செல்வாக்கு இல்லை; லீகரல்லாத மந்திரிசபையேதான் ஏற்படமுடியும் என்றனர். இப்போது, லீகுக்குத்தான் கிடைக்கும் பஞ்சாப் ஆட்சி என்று, காங்கிரசே கண்டுகொண்டது என்பது விளங்கி விட்டது. எனவே லீக் ஆட்சியிலே, பெருவாரியாக இந்து, சீக்கியர் உள்ள பகுதிகளை விட்டுவைக்க முடியாது என்று தெரிவிக்கின்றனர்.

ஆஞல், இந்துக்கள் ஆட்சி செய்யப் போகும் சில மாகாணங்களிலே, முஸ்லீம்கள் இருக்கப் போகின்றனரே, அவர்களெல்லாம் அந்தந்த மாகாணங்களில் தனி இடம் கேட்டால் என்ன பதில் சொல்வது, என்பது பற்றிக் காங்கிரஸ் கருத மறுக்கிறது. அதுமட்டுமல்ல. எந்தப் பகுதியைப் பாஞ்சாலத்திலிருந்து பிரிக்க விரும்புகிருர்களோ, அதே இடத்திலே, பெருவாரியாக முஸ்லீமல்லாதார் இருந்தாலும், முஸ்லீம்களும் குறிப்பிடத்தக்க அளவு உள்ளனர், ஏற்கனவே,

இந்து மெஜாரடி மாகாணங்களிலே உள்ள முஸ்லீம்கள், இந்து ஆட்சியிலே இருக்க நேரிடுவது போதாதென்று, இப்போது பாஞ்சாலத்திலிருந்து பிரிக்கப்படும் பகுதியிலுள்ள முஸ்லீம்களும் இந்து ஆட்சிக்கு உட்படவேண்டும் என்று, திட்டுகிறது காங்கிரஸ். அந்தப் புள்ளிவிவரத்தைக் காட்டு கிரேும்.

	முஸ்லீம்
கர்கான்	33 %
ஹிசார்	28
பிரோஸ்பூர்	45
லூதியாஞ	36
ஜலந்தர்	45
அமிர்தசரஸ்	46
குருதாஸ்பூர்	51
ஹோஷியார்பூர்	32
கங்கரா	4
அம்பாலா	31
கர்ஞல்	30
ரோடாக்	17

இவ்வளவு முஸ்லீம்கள் உள்ளனர். இவர்கள் இந்து ஆட்சியில் இருக்கவேண்டுமாம். ஏன்? யார் கூறுகிருர்கள் காரணம்!

இந்த அளவு பூமியும், இந்த அளவுள்ள முஸ்லீம் அல்லாதாரும், முஸ்லீம் ஆட்சியிலே இருக்கக் கூடாது என்று கருதும், காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு,

பம்பாய்	ம. மா.
ஐ. மா.	சென்னே
பீகார்	

ஆகிய மாகாணங்களிலே, முஸ்லீம்கள் பலகோடிப் பேர் முஸ்லீமல்லாதார் ஆட்சியிலே இருக்கவேண்டுமே என்கிற எண்ணமே இல்லேப்போலும்! இவ்வளவு பெருந் தொகையின ராக, முஸ்லீம்கள், இந்து ஆட்சிக்கு உட்பட்டு இருக்க வேண்டும்—இருக்கச் சம்மதிக்கிருர்கள். ஜனுப் ஜின்ஞவே, பாகிஸ்தானில் அல்ல, பம்பாயில் இருக்க வேண்டியவர், இன்றைய நிலேயின்படி. அவ்விதமிருக்க, முஸ்லீம்களின் ஆட்சியிலே, முஸ்லீம் அல்லாதார் இருக்கக்கூடாது என் பதைக் காரணம் காட்டி ஒவ்வொரு முஸ்லீம் மாகாணத் தையும் துண்டுகளாக்கும் அளவுக்குக் காங்கிரஸ் முனேகிறது. பஞ்சாபில் மட்டுமல்ல, எங்கும் இந்தப் புதுத் திட்டம் தலே தூக்கி விட்டது!

பிரபல காங்கிரஸ் வாதியாகிய ஜெயராம்தாஸ் தௌலத்ராம் என்பவர், சிந்துமாகாணத்திலே, காரச்சியிலும் அதை அடுத்துமுள்ள சில ஜில்லாக்களிலும் இந்துக்கள் பெருவாரியாக இருப்பதால், அவர்களேச் சிந்துவில் ஏற்படக்கூடிய முஸ்லீம் ஆட்சியிலே ஒப்படைக்கக்கூடாது; அந்தப் பகுதிகளே—அதாவது சில ஜில்லாக்களே, சிந்து மாகாணத்திலிருந்து பிரித்துத் தனித் துண்டு ஆக்கிவிட வேண்டும் என்று திட்டம் தீட்டி, தலேவர்களுக்கெல்லாம் அனுப்பி இருக்கிருராம்.

வங்காளத்திலேயோ, கீழ் வங்காளப் பகுதியை, வங்காளத்திலிருந்து பிரித்து இந்து பூமியாக்கிவிட வேண்டும் என்று, வங்காள மாகாண இந்து மகாசபைத் தலேவர் திட்டம் வெளியிட்டிருக்கிருர்.

பிர்புன்	மித்ஞபூர்
பங்கூரா	24 பர்கானம்
சுர்துவான்	குல்ஞ
ஹுக்ளி	

எனும் வங்காளத்திலேயுள்ள ஜில்லாக்களைத் தனியாக்கி விடவேண்டும் என்கிறார்கள்.

வடநாட்டு வம்பு நமக்கு ஏன்?

ஆக, இப்போது, பாஞ்சாலம், சிந்து, வங்காளம் ஆகிய இடங்களிலெல்லாம், மாகாணங்களைத் துண்டு களாக்கும் திட்டம் தயாராகிறது. யார், பாரத்வர்ஷத்தையா துண்டிப்பது என்று ஆத்திரமும் அழுகுரலும் கலந்த குரலில் கேட்டார்களோ, அவர்களின் புதுத்திட்டம் பாகிஸ்தானை மறுப்பது அல்ல; சிதைப்பது, குறைப்பது என்ற அளவுக்கு வந்துவிட்டது! இதன் விளைவு, ஓர் இன மக்களின் ஆளுகை, மற்ற இன மக்களுக்கு அறவே ஆகாது என்று ஆகுமோ என்னவோ, பிறகு கவனிப்போம். இதனால் கிடைக்கும் பாடம் என்னவென்றால், ஓரரசு என்ற கற்பனைக்கு இடம் இல்லை இனி, என்று ஏற்பட்டு விட்டது. அதுமட்டுமா? வடநாட்டு நிலைமை, இப்படிப் பிரிவினை, பிரிவினைக்குள் பிரிவினை, மாகாணத்துக்குள் குட்டி மாகாணம் என்ற அளவுக்குப் போகிறது! இந்த நச்சுச் சுழலில் சிக்கவேண்டிய அவசியமே யில்லாத தென்னாடும், A-பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிற காரணத்துக் காக, அச்சுழலிலே சிக்க வேண்டி நேரிடுகிறது. இது நல்லதா? நமக்கு அவசியந்தானா? வடநாட்டு வம்புக்கு நாம் ஆளாகி, நமதுவளத்தை இழக்கத்தான் வேண்டுமா? நீங்கள் உங்கள் பூபாகத்துத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள்; எந்த முறையிலேயோ, திராவிடம் தனித்துவாழவும் தலைபோகும் விதமான தகராறுகளுக்கு விளைநிலமாக இராமலும், இயற்கையாகவே பிரிந்தும் இருக்கிறது. இதனை A தொகுதியிலே சேர்த்து, உங்கள் தகராறுகளிலே எங்களையும் சிக்கவைக்கவேண்டாம்; நாங்கள் தனித்து வாழ விரும்புகிறோம்—எங்களைத் தனி அரசு ஆக அமைத்துக்கொள்கிறோம், என்று ஏன் நாம் கூறக்கூடாது? ஏன் நமது காங்கிரஸ் தோழர்கள், வட நாட்டிலே கிளம்பும் பயங்கரச்சுழலில் தென்னாடு சிக்கிச்

சீரழியாதபடி தடுக்ககூடாது? இதுகேள்வி அல்ல! மாற்றுக் கட்சிக்காரனின் எதிர்ப்புரை அல்ல! எதிர்காலம் எப்படியோ என்று ஏக்கம் கொண்டு தூக்கமிழந்த திராவிட இளைஞர் ஒவ்வொருவரும், காங்கிரசிலுள்ள திரவிடத் தோழர்களுக்கு விடுக்கிற வேண்டுகோள். நண்பர்களே! நாடு மீள, நாம் வாழ, இன்றே திராவிடம் தனி அரசாக வேண்டும்; A தொகுதியின் பிணைப்பு வேண்டாம்! என்று தீர்மானியுங்கள்.

வம்பும் வல்லடியும் செழித்து வளரும் விதமாக, வடநாட்டு மக்கள் நிலையும், அவர் தம் வரலாறும் மனவளமும் அமைந்து விட்டன. நாடு ஒரே இனத்தாரின் ஆளுகையில் இருத்தலாகாது; எங்களுக்கென்று ஓர் அரசு தேவை என்று லீக் கேட்டது இன்று மாகணத்துக்கு மாகாணம், இரண்டாகும் திட்டத்தை வலியுறுத்துகிறது காங்கிரஸ் வடநாட்டில்! அரசியல் நிர்ணய சபையிலே, லீக் கலந்து கொள்ளவில்லை. லீக் கலந்து கொள்ளாததால், அரசியல் நிர்ணய சபையின் முடிவை அமுலுக்குக் கொண்டு வர இயலாது என்று, பிரிட்டிஷார் கூறுகின்றனர். அரசியல் நிர்ணய சபையிலே, B. C. தொகுதிகளின் கூட்டத்திலே கலந்துகொள்ள அசாம் மறுக்கிறது. எல்லையிலுள்ள காங்கிரஸ் தலைவர்களும், பஞ்சாபிலுள்ள சீக்கியரும் மறுக்கின்றனர். எனவே, தொகுதிகள் கூட்டம் கூடவில்லை; கூடித்திட்டம் தீட்டினாலும், கூட்டத்திலே கலந்து கொள்ளாத பகுதியினர் மீது, திட்டத்தைத் திணிப்பதற்கில்லை என்றுபிரிட்டிஷார் கூறுகின்றனர். இந்தச் சிக்கல் வளர்ந்து, முற்றி, வழிஏதும் தென்படாமல் தலைவர்களே திகைக்கிற நேரமாகப் பார்த்து பிரிட்டிஷார் 'இன்னும் 16 மாதங்களே இருப்போம்—பிறகு வெளியேறிவிடுவோம்—இதற்குள் ஏதாவது முடிவுக்கு வாருங்கள்—இல்லையேல், எங்களுக்கு எது யுக்தமென்று தோன்றுகிறதோ, அதன்படி அமைப்பு ஏற்படுத்தி விட்டுப் போய்விடுவோம்' என்று கூறுகின்றனர். பயங்காட்டுகின்றனர்; அல்லது கேலிசெய்கின்றனர் என்று கூடக்

கூறலாம் இதனை. யார் ஏற்படுத்தும் அமைப்பும் முறையும் ஒருவருக்கொருவர் கசப்பையும் விரோதத்தையும் முற்றச் செய்துவிட்ட நிலையில், வலிமையைக்கொண்டு நிலைநிறுத் தப்படமுடியுமே தவிர, வேறுவழி இல்லையே! இதற்குச் சுருக்கமான, ஆனால் நினைத்தாலே பயமூட்டக்கூடிய பெயர், உள்நாட்டு யுத்தம் ஒன்பது தானே! நாடு இன்றுள்ள கேவலம் போதாதா? உள்நாட்டுயுத்தம் என்றால் என்ன பொருள்? இன்று சீரழியும் சீனாவின் நிலைதானே!! இதற்கா இவ்வளவு " தியாகமும் " பயன் படவேண்டும்! இந்நிலை வந்தால், மீண்டும் வல்லரசுகளின் வேட்டைக் காடாக நாடு மாறுவதன்றி, வேறென்ன நேரிடமுடியும்? இந்தத் தொல்லையிலிருந்து விலகுவதைவிட்டு, சகல விதத்திலும் வசதியும் உரிமையும், அவசியமும் பெற்ற திராவிடத்தை, ஏன் இதிலே சிக்கவிடவேண்டும்? ஏற்கனவே தேய்ந்துள்ள நமது தரணி, உருவின்றிச் சிதையுமே வட நாட்டுடன் நாம் வலியக் கட்டப்பட்டால். இதனை ஏன் நமது காங்கிரஸ் நண்பர்கள், முன் கூட்டியே உணரக்கூடாது?

கிருஷ்ண—கரீம் போதாது!

ஏற்கனவே, கலகபூமியாகிவிட்ட வடநாட்டிலே. இன்று என்ன நிலைமைக்கு நாட்டை இழுத்துச் செல்கிறார்கள் என்பதைக் காட்டினோம். நவகாளியில் வயல்களிலும், ஒற்றையடிப் பாதைகளிலும் நடந்துசென்று, **ரகுபதிராகவ ராஜாராம் பதீதபாவன சீத்தாராம்'** என்ற வழக்கமான பஜனைப்பாட்டுக்கு இரண்டு புதிய அடிகள் சேர்த்திருக் கிறார் காந்தியார். '**ஈஸ்வர் அல்லா தேரே நாம், சக்கோ சன்மதி தே பகவன்.**' பகவானே! உமக்கு, ஈஸ்வரன் என்ற பெயரும், அல்லா என்ற பெயரும் இரண்டும் தான்; எங்களெல்லோரையும் சரியான வழியிலே நடத்தி அருளும் இது பாடலின் கருத்து. மேலும் ஒரு பாடல்,

> **"பஜமன, பியாரே, ராமரஹிம்**
> **பஜமன பியாரே, கிருஷ்ண—கரீம்"**
> **ராம ரஹீம்! கிருஷ்ண—கரீம்!!**

இப்படி இணைத்துக் காட்டுகிறூர், இது புதிய முறையா ? அல்ல! சமரச ஞானிகள் யாவரும், இதையே தான் நெடுங் காலமாகவே வற்புறுத்திக் கூறிவந்துள்ளனர் பலரால், பல விதமான பெயர் கூறித் தொழப்பட்டாலும், ஆண்டவன் ஒருவனே தான் என்பதை மறுத்தவர்கள் கிடையாது. நெருக்கடியான நேரத்திலே, இதனைக்கவனப் படுத்தாதவர்கள் கிடையாது. ஆனல் அரசியல், பொருளியல், சமுதாயத்துறைகளிலே, இருபெரு இனங் களுக்கிடையே மூண்டுவிடும் சந்தேகத்தைப் போக்க, இத்தகைய சமரசபோதனைகள், எந்த நாட்களிலும் பயன்பட்டதுமில்லை. தகராறு, ராமா ? ரஹிமா ? என்பதிலே ஆரம்பமாகவில்லையே ! காங்கிரசா, லீகா ? ஏகாதிபத் தியமா, இரு அரசுகளா ?—இவையல்லவா பிரச்னைகள் ! இவைகளைத் தீர்க்க, கிருஷ்ண—கரீம் என்ற ஒட்டு மந்திரம் போதாதே.

காந்தியார், இந்துக்களுக்குத் தைரியமூட்டி, இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு வழிகாட்டி, வங்கத்தை விட்டு வெளியேற வேண்டாமென்று இந்துக்களுக்குக் கூறினர். இதோ, இப்போது, பீகார் சென்று, முஸ்லீம்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களைப் பீகாரை விட்டு வேறு இடம் போக வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறூர், அவர் களுக்குத் தைரியமும் நம்பிக்கையும் வருகிற முறையில், பீகார் இந்துக்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று நல்லுரை கூறுகிறூர். காந்தியாருக்குப் பஞ்சாபும் வேலை தருகிறதே ! இனி, இவ்விதம் இவருக்குப் புண்ணுக்கு மருந்திடும் பணியினைக் கொடுத்துக் கொண்டே இருப்பது, பொறுப்பும் அன்பும் கொண்ட செயலாகுமா ? ஏன், அத்தகைய நிலைமை அங்கு வளர்கிறது ? வடநாட்டுச் சூழ்நிலை, அதற்கு மிக முக்கியமான காரணம். அந்தப் பகுதியுடன், ஏன் நமது தரணியை இணைத்துப் பாழ்பட வேண்டும் என்று, ஆர அமர யோசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேம். கட்சிக் கட்டுகளையும் மீறிச் சிந்தனையை

ஓட்டினால்தான், இதற்கோர் விளக்கம் கிடைக்கும்—வழி தெரியும்.

காங்கிரஸிலுள்ள திராவிடத் தோழர்களுக்கு, ஒரு வேண்டுகோள். நண்பர்களே! இந்தியா ஒரே தேசம். இதன் ஆட்சி, ஒரே அரசாகவே அமைதல் வேண்டும்; எனவே, இதிலே வடநாடு, தென்னாடு என்று பிரித்துப் பேசுவது கூடாது. அகில இந்திய அரசியல் வேண்டும்; ஆகவே, அகில இந்தியக் காங்கிரசிலே இருந்தாக வேண்டும்' என்று கூறினீர்கள். உங்கள் வாதம் நேற்றுவரை சரியாக இருந்திருக்கக்கூடும். இன்றைய நிலைமை என்ன? காங்கிரஸ் உட்பட, பல கட்சியும் ஓரரசுக் கொள்கையை விட்டுவிட்டனவே. லீக் திட்டப்படி காரியம் நிறைவேறினால், எல்லை, பஞ்சாப், சிந்து, வங்கம், அசாம் இவை நீங்கலாக மற்றப் பகுதிக்குத்தான் காங்கிரஸ் தீட்டும் ஆட்சிமுறை இருக்கும். லீக் திட்டத்தை உருக்குலைக்க இப்போது காங்கிரஸ் புகுத்தும் புதுத் திட்டப்படி பார்த்தாலும், எல்லையும் அசாமும் தனித்தனி! பஞ்சாபில் ஒரு பகுதி தனி! சிந்துவில் ஒரு பகுதி தனி! வங்கத்தில் ஒரு பகுதி தனி! இப்படி ஆகிவிடுமே! இந்தக் கேலிச் சித்திரத்துக்கு, அகில இந்தியா என்று பெயரா? இதுவா, பாரத் வர்ஷம்!

இந்த இருவிதமான திட்டங்களிலே எது வெற்றி பெற்றாலும், காங்கிரசில் நீங்கள் சேர்ந்து, கண்டுவந்த இலட்சிய பூமியாக இராது! வடக்கே இமயம் முதல், தெற்கே குமரி வரை அல்ல!! அந்த இலட்சிய பூமியின் எல்லைக்கோடு, வேறாகி விட்டதே.

> **சிந்து நதியிசை நீரத்திலே**
> **சேரநன் னாட்டிள மங்கையொடு**
> **சுந்தரத் தெலுங்கினில் பண் இசைத்தே**
> **தோணி விட்டு விளையாடிடுவோம்.**

இந்தக் கவியின் கனவு நிஜனவாவற்கு மார்க்கம் இல்லே, லீக் திட்டப்படி காரியம் நடந்தாலும் சரி, காங்கிரஸ் திட்டப்படி காரியம் நிறைவேறிஞலும் சரி, ஏனெனில், அகில இந்திய அரசியல் திட்டம் இனி இல்லே. A B.C. என்ற மூன்று பிரிவுகளாக நாடு பிரித்து, அரசு அமைவதற்குக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டுவிட்டது. இப்போது காங்கிரஸ் செய்துவரும் முயற்சி எல்லாம், A.B C என்ற பிரிவுகள் இல்லாமற் செய்ய அல்ல. முஸ்லீம் பிரிவுகளாக உள்ள B. C, இரண்டிலும், எந்த அளவுக்குக் குறைக்கலாம் என்பது தான்! குறைக்கிருர்களோ, அன்றி, வேறு பல பிரச்னே களில் விடாப்பிடியாக இருந்து விட்டுக் கடைசி நேரத்தில் விட்டுக் கொடுத்ததுபோல, இதிலும் இருப்பார்களோ நாமறியோம். எது எப்படியாஞலும், முழு இந்தியா—ஒரே இந்தியா, இல்லே என்பது ஏற்பட்டுவிட்டது. இது தெளிவான பிறகு, காங்கிரஸ் நண்பரே! ஏன் இன்னமும் நமக்கு அகில இந்தியக் காங்கிரஸின் தொடர்பு? கொஞ்சம் சங்கடமான கேள்வி. ஆனுல் நாளாகவாக, சிந்தனேயைக் கிளறியே தீரும் இந்தக் கேள்வி!

அகில இந்திய அரசியல் திட்டம் உருவாக முடியாது என்பது தெளிவாகிவிட்ட பிறகு, தென்னுட்டுத் தோழர்கள், அகில இந்தியக் காங்கிரசின் தொடர்பு அவசியம் என்று என்ன காரணம் காட்ட முடியும்? சற்றுக் கோபமின்றிச் சிந்திக்க வேண்டும். எல்லோரும் உடனே திராவிடர் கழகத் திலே சேர்ந்தாகவேண்டும் என்று, புன்ஞகவராளி பாடு கிருயோ என்று கேட்காதீர்கள் நண்பர்களே! தனிக் கட்சியாகக் கூட இருங்கள்; நாங்கள் குறை கூறவில்லே. நாங்கள் கேட்பது, அகில இந்திய அரசியல் திட்டம் குலேந் தான பிறகு, ஏன் அகில இந்தியக் காங்கிரசில் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள்? என்ன பயன்? பயன் இல்லாமற் போனுலும் போகட்டும். பாசம் விடவில்லேயே என்றுகூட மனதுக்குச் சமாதானம் கூறிக்கொள்ளலாம்; பயன் இல்லாத துடன், கேடுபயப்பதாகவே இருக்கிறதே அந்தத் தொடர்பு;

அத்தகைய தொடர்பு ஏன்? காரணம் ஏதேனும் இருக்கிறதா? முன்பு இருந்திருக்கலாம் நண்பரே! இன்று? அகில இந்திய அரசியல் இல்லை என்ற பிறகு! A.B.C. ஆன பிறகு!! யோசித்துப் பாருங்கள்

'வலை வீசுகிறான்' என்று எண்ணிவிடாதீர்கள். திராவிடர் கழகத் தலைவர் பெரியார், பல மேடைகளிலே சொல்லி இருப்பதை—சூட்சமத்தை—உங்கட்குக் கவனமூட்டுகிறேன். **'வட நாட்டுத் தொடர்பை அறுத்துக்கொண்டால், நானும் என் தோழர்களும், (தென்னாட்டுக்) காங்கிரசில் சேருவதற்குச் சித்தமாக இருக்கிறோம்'** என்று கூறி இருக்கிறார். ஆகவே, கட்சிக்கு 'ஆள் பிடிக்கும்' காரியம் என்று, இதைக் கருதாதீர்கள். நமக்குள், அவசியமுமற்று, பலனுமற்று இருக்கிற 'கட்சிப் பாகுபாடு' போகவேண்டும் என்பதற்கே, இதனைக் கூறுகிறேன்.

A.B.C. என்ற பிரிவுகளில், B.C. ஆகிய முஸ்லீம் பிரிவுகளைக் குறைக்க வடநாட்டுக் காங்கிரஸ் வேலை செய்வதும், B.C, பிரிவு, தங்கள் திட்டப்படி இருக்கவேண்டுமென்று லீக் வேலை செய்வதும், அங்கு இப்போது நடைபெறுகிறதேயொழிய, A B C. என்று மூன்று பிரிவுகளாக நாடு துண்டாடப்படக் கூடாது என்பதற்காக அல்ல வேலை நடப்பது. அந்த 'வேலை,' செய்துபார்த்துக் கை விட்டாகிவிட்டது. இப்போது அங்கு நடைபெறுவது, இந்துஸ்தானத்துக்கு இன்னும் சில ஜில்லாக்கள் சேர்ப்பது, பாகிஸ்தானத்துக்குள்ள ஜில்லாக்களில் சிலவற்றைக் குறைப்பதன் மூலம் என்பதுதான்! இந்த நாடு தேடும்' வேலை நடக்கிறது, வயலிலே வரப்பை அகலமாக்கி அகலமாக்கி, பக்கத்து வயலுக்குள் படை எடுக்கும் முறைபோல இதிலே, நமக்கு என்ன வேலை இருக்கிறது? இந்தக்காரியம் நடக்கும் கட்டம் வந்தான பிறகு, தென்னாட்டுத் தோழர்கள், ஓர் அகில இந்தியக் கட்சியிலே தொடர்பு இருக்கவேண்டுமென்று எண்ணுவானேன்—கொள்வானேன்—என்ன பொருள்?

என்ன பலன்? என்ன அவசியம்? எண்ணிப் பார்த்து, ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டுகிறேன்

காங்கிரசின் வேலை, ஏறத்தாழ முடிந்துவிட்டது என்பதை, எல்லாக் காங்கிரஸ் நண்பர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஏகாதிபத்யத்தை முறியடிக்கத்தானே காங்கிரஸ்? சரி, மூலபலம் இழந்த ஏகாதிபத்யம், மூட்டை கட்டுகிறேன் என்று கூறியான பிறகு, காங்கிரசின் அடிப்படை வேலை வெற்றி பெற்றுவிட்டதல்லவா? காங்கிரசிலே சேர்ந்தது, ஏகாதிபத்ய ஒழிப்புக்குத்தானே? ஏகாதிபத்யந்தான் ஒழிகிறதே 1948ல். இனிக், காங்கிரசில் இருந்து ஆற்றவேண்டிய தொண்டு என்ன இருக்கிறது?

''சுயராஜ்யத்தைப் பெற்றால் போதுமா? செப்பனிட வேண்டாமா? நாட்டைச் சீராக்க வேண்டாமா? பிற்போக்காளரின் ஆதிக்கம் புகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டாமா? நலிவுற்றுள்ள நாடு பொலிவு பெறும்வரை, நமக்கு வேலை இல்லையா? காங்கிரசுக்கு, வேலை இருக்கிறது! மீட்டுவந்த நாட்டை வளமாக்கும் வேலை இருக்கிறது,'' என்று கூறுவீர். பொருத்தமான பேச்சுத்தான் அது. அவசியமான பேச்சு, மறுக்கமுடியாத காரணம். நான் இல்லை என்று கூறவில்லை இவைகளைச் செய்யத்தான்வேண்டும்—செய்தால்தான் நல் அரசும், நல் அரசால் ஏற்படும் நல் வாழ்வும் கிட்டும். நான், அந்த வாதத்தை மறுக்கவில்லை—ஆனால் ஒரே ஒரு கேள்வி, நண்பரே! நாட்டைச் சீராக்க, வளம் உண்டாக்க, வம்பரிடம் சிக்காதிருக்க, இன்னோரன்ன நற்காரியங்களைச் செய்வதற்கு, அகில இந்தியக் கட்சி ஏன்? நீர், வாழும் தரணிக்கெனக் கட்சி இருத்தலன்றோ முறை? திட்டம் அதற்குத் தக்க முறையில் அமைத்துக்கொள்வதன்றோ சரி! அவசியம் செய்யவேண்டிய நீர், உரிமையுடன் ஆசை கொள்கிற அந்தக் காரியங்களைச் செய்வதற்கு, அகில இந்தியக் காங்கிரசின் தொடர்பு எந்த விதத்திலே அவசியம்? எண்ணிச் சொல்லுங்கள்! எனக்காக என்றும் வேண்டாம்;

நான் கேட்கிறேன் என்பதற்காகவும் உண்மையை உரைக்கக் கூசவேண்டாம் ; உம் நாட்டுக்காக, உள்ளம் உரைப்பதைச் சொல்லுங்கள் ; உம் நாட்டைத் திருத்தும் நற்காரியத்துக்கு அகில இந்திய இலட்சியத்தை விட்டுவிட்ட, ஓர் அகில இந்தியக் கட்சியின் பிணைப்பு ஏன் ? என்ன அவசியம் ? என்ன பலன் ? என்ன பொருள் ?

காவிரி உண்டு ! கங்கை ஏன் ?

இங்கு, இனிச் செய்யப்பட வேண்டிய காரியங்கட்கும், வட நாட்டுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் ? நமது நாட்டிலே பிறந்து, வாழ அவர்களுக்கு உரிமை இருந்தும் வசதி தேடித் தராததால் மலாய், இலங்கை, ஜான்சிபார், மோரீஸ் இப்படிப் பல கண்காணாச் சீமைகளிலே சென்று எலும்புருகப் பாடுபட்டுவரும் கேவல நிலைமைக்கு, பல இலட்சம் உடன்பிறந்தவர்களை, நாம் விட்டு வைத்திருக்கிறோமே ! அவர்களை வரவழைத்து, வாழ்வளிக்க வேண்டும். இந்தக் காரியத்தை நாம் செய்வதற்கு, இங்கு நமது நாடு வளமாக்கப்பட வேண்டும். நாமென்ன, கங்கையின் தண்ணீரைக்கொண்டா வளமாக்கப் போகிறோம் ! காவிரி, வைகை, தென்பெண்ணெய், உண்டே ! இரு கரைகளிலும் எழில் மிகுந்த வயல்கள் உள்ளனவே. காடும், அதனிலே பயன்தரும் பொருளும் உள்ளனவே. என்ன இல்லை என்று, எந்தப் பொருளுக்கு ஏங்கி, வட நாட்டை நாம் எதிர்பார்க்கப்போகிறோம் ? காவிரிக் கரையிலே செய்யவேண்டிய காரியங்கட்குக் கங்கைக்கரையின் தொடர்பு இருப்பானேன் ? கோபித்துக்கொள்ளாதீர் நண்பரே ! யோசித்துப் பாருங்கள். இங்கே, ஆயிரம் அல்லல் இருக்கிறது, இவைகளைத் தீர்த்துக்கொள்ள, நமக்கு வடநாட்டுத் தொடர்போ, அகில இந்தியக் கட்சியின் தொடர்போ ஏன் ? என்ன பயன் ? வளமற்ற, வகையற்ற, சிந்திக்கும் திறனற்ற, காரியமாற்றும் ஆற்றலற்ற, பழய வரலாறு அற்றநாடாக இருப்பின், துணை தேடவும், தொடர்பு தேடவும் வேண்டுவது முறைதான் ! நமக்கு இல்லையே,

அந்தத் தாழ் நிலே! எல்லாம் இருக்கிறது இங்கே—எதையும் செய்யும் ஆற்றலுள்ளவர்கள் உள்ளனர் இங்கே—இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, எந்த இனமும் கண்டறியாத இலக்கியங்களேக் கண்ட நாடு இது. யவனத்தோடு வாணிபமும், சீனத்தோடு தொடர்பும், பண்டை நாட்களிலேயே ஏற்படுத்திக்கொண்ட நாடு. நமக்கு என்ன இல்லே என்று, இன்று வடநாட்டுத் தொடர்பு வேண்டுமெனக் கூற முடியும்.

உலகிலே சமாதானம் நிலவச் செய்வதற்காக, முன்பு சர்வதேச சங்கம் அமைத்தனர். பல நாடுகள் அதிலே சேர்ந்தன. சங்கம் பங்கப்படும்படி, முசோலினியும், ஹிட்லரும் கிளம்பினர். போர் மூண்டது. இன்று இல்லே போர். போர்மட்டுமா, காரியமாற்ருத சங்கமும் இல்லே.

அகில இந்தியாவையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவர, அகில இந்தியக் காங்கிரஸ் இருந்தது. இன்று காங்கிரசே, அகில இந்திய அரசு சாத்யமில்லே என்று உணர்ந்து, அதற்கேற்றவண்ணம் செயல்முறையை மாற்றிக்கொண்டது. இந் நிலேயில், தென்னுட்டுக்கு, அகில இந்தியத் தொடர்பு ஏன்?

நாடு திருந்தும் நற்காரியங்கள் செய்யவேண்டும்—சுயராஜ்யத்தின் பலன் அப்போதுதான் தெரியும். அந்தக்காரியம் செய்வதற்கு, வடநாட்டுத் தொடர்பு தேவையில்லேயே-நாம் செய்யவேண்டிய வேலே—நமது நாட்டு நிலேமைக்கும், பண்புக்கும், தேவைக்கும், வசதிக்கும், ஏற்றமுறையில்! இதனேச் செய்ய, அகில இந்தியக் கட்சி அவசியமில்லேயே—அங்ஙனமிருக்க, ஓர் அகில இந்தியக்கட்சி ஏன்?

திகைக்கும் அளவுக்குக் கேள்வி போடுகிறேன் என்று அதிர்ப்திபடாதீர் நண்பரே! இதைத் தெரிந்துகொண்டாலே, காங்கிரசையே கலேத்துவிடுவார்களே! ஏன், காங்கிரசைக் கலேக்கவில்லே, அவர்கள் ஏது மறியாதவர்கள் என்பது உன் எண்ணமோ?—என்று கேட்கத் தோன்றும் உமக்கு. அதுவும் நியாயமான கேள்விதான்.

வடநாட்டுக்கு, இனியும் காங்கிரஸ் தேவை! அவசியம் இருக்கிறது! வேலையும் உண்டு! இரண்டு முக்கியமான வேலை செய்ய, காங்கிரஸ் தேவைப்படுகிறது. இரண்டு முக்கியமான வேலை என்று கூடப்பிரித்துக் கூறமுடியாதபடி, அந்த இரண்டும் ஒன்றுக்கொன்று தழுவிக்கொள்கின்றன. ஒன்று, முஸ்லீம்களின் ஆதிக்கம் வரவிடாதபடி தடுப்பது. மற்றொன்று, ஓங்கிவளர்ந்துள்ள முதலாளித்வம், சரியாதபடி பாதுகாப்புத் தருவது—இந்த இரண்டுக்கும், காங்கிரஸை வடநாட்டிலே பயன்படுத்தத் திட்டமிட்டுவிட்டார்கள்!! எனவேதான், காங்கிரஸ் சமதர்மக் கட்சியினரான ஜெயப்பிரகாஷ், அருணா அசப் அலி, அச்சுதபட்டவர்த்தன் போன்றோர்கள், "காங்கிரஸில் டால்மியாக்களும், பஜாஜுகளும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்" என்று வெளிப்படையாகவே பேசுகிறார்கள். இந்தக் காரியத்துக்கு, வடநாட்டுக் காங்கிரஸ் மேலும் பயன் படுத்தப்படவேண்டும் என்பதற்காக, இப்போதே பிரச்சார யந்திரத்தை வடநாட்டு முதலாளிகள் கைப்பற்றிவிட்டனர்.

இந்நிலையில் நமக்கு ஏன், வடநாட்டுக் காங்கிரசின் தொடர்பு?

நாம் ஏன், வம்பை விலைகொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டும்?

தேன் இருந்த கரமானாலுங்கூட, தேன் சாப்பிட்டான பிறகு, கழுவிவிடவேண்டுமே! இல்லையானல், சிற்றெறும்பு கடிக்குமே கரத்தை. டால்மியாவும் பஜாஜும் பிறரும், சிற்றெறும்புகளல்லவே! முதலாளித்வம் கொட்டினால், ஏற்கனவே நலிந்துள்ள நம் நாடு தாங்காதே!

எனவேதான் நான் கூறுகிறேன், வடநாட்டுத் தொடர்பும், அகில இந்தியக் கட்சியும், இனியும் தேவை என்று காங்கிரசிலுள்ள திராவிட மக்கள் கூறுவதற்கில்லை, பொருளில்லை, அவசியமில்லை, பலனில்லை, என்கிறேன்.

புதிய பிரச்னை—புது முறை தேவை

அப்படியானல், கட்சியே வேண்டாமா ? என்பீர். கட்சி வேண்டும்—நாட்டுக்கு இன்று முதல் செய்ய வேண்டிய நற்காரியங்கள், ஏராளமாக உள்ளன. சமுதாய, பொருளாதாரத் துறைகளிலே, தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகள் ஆயிரமாயிரம் உள்ளன. சாதியறியாத் தமிழனிடம் சாதி தலைவிரித்தாடும் கொடுமையைக் களைய, வறுமையறியாத் தமிழனிடம் வறுமை கோர நாட்டியமாடுவதை நிறுத்த, தூங்கும் இயற்கையைத் தட்டி எழுப்ப, சோம்பிக் கிடக்கும் செல்வத்தைச் சுறுசுறுப்பாக்க, தேம்பித் தவிக்கும் தொழிலாளரை வாழவைக்க, திசைபல சென்று துயருறும் உடன்பிறந்தோரை வரவழைக்க, நண்பரே ! எண்ண எண்ண எத்தனையோ வேலைகள் மனக்கண்முன் நின்று, நான் முன்னே, நீ முன்னே என்று சண்டையிடக் காணலாம். விஞ்ஞானத்தை வரவேற்க வேண்டும்—மண்ணில் புண்பட்ட வாழ்வு இருப்பதால் விண்ணை நோக்கிக் கைதூக்கி நிற்கும் தோழர்களுக்கு, வாழ வழி அமைக்க வேண்டும். புதிதாக உருக்கி வார்த்தாகவேண்டும் சமூகத்தை. இந்தக் காரியத்துக்குக் கட்சி தேவை ! இவைகளைச் செய்யும்போது, பிற்போக்கு—தீவிரம்—நடுநிலை—என்று, கட்சிகள் அமையும் ! காங்கிரசிலுள்ள திராவிடத் தோழர்களே, இதற்கான முறையிலே, கட்சியை அமைத்துக்கொள்ள முனையுங்கள். அமைக்கும்போது, ஒரு முறை, திராவிடர் கழகம் இத்தகைய வேலைகளுக்கான கொள்கை கொண்டிருக்கிறதா இல்லையா என்று பாருங்கள். உண்டு எனில், அதில் சேருங்கள். சேருவானேன், நண்பர்களே ! அதைக் கைப்பற்றுங்கள் ! ! இல்லையென்று உங்கட்குத் தோன்றுமானல், வேறு கட்சி அமைத்துக்கொள்ளுங்கள் — நான் குறை கூறவில்லை. ஆனல், வேண்டாததும், பலன் தரமுடியாததும், அவசியமற்றதும், அல்லலைத் தருவதுமான அகில இந்தியக் காங்கிரசின் தொடர்பையும், அதன் மூலம் வடநாட்டுத் தொடர்பையும் நீக்கிவிடுங்கள்.

1948-ல், ஆங்கில ஏகாதிபத்யம் வெளியேறுகிறது. அதே நன்னாளில், தென்னாடும் தனி உரிமை பெற்றுத் திகழத் தீர்மானித்து, அதற்கான திட்டம் வகுத்துக் கொண்டதுடன், நாடு முன்னேற, நற்பணிபுரிய முனைந்துவிட்டது; அந்தக் காரியத்துக்கு, வடநாட்டுத் தொடர்பும், அகில இந்தியக் கட்சியும் தேவை இல்லை என்று உணருவதால், அந்தத் தொடர்பை நீக்கிக்கொண்டது என்ற நிலை பிறக்கச் செய்யுங்கள்.

மூட்டை கட்டுகிறேன்! 1948 ஜூன் மாதத்தில் வெளி ஏறுகிறேன். வேண்டாமப்பா வீண் தொல்லை!

வெள்ளை ஏகாதிபத்யம் கூறிவிட்டது இதுபோல், பல ரறிய—பாரறிய—பாராளும் மன்றத்தில்! பிரதம மந்திரி அட்லியின் அறிவிப்பு, கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக, இந்தியப் பூபாகத்தைப் பிடித்தாட்டிய ஏகாதிபத்யம் ஒழிகிறது என்பதைத் தெரிவித்துவிட்டது..

மகிழ்ச்சி! மட்டில்லா மகிழ்ச்சி! தமிழரே! தோழரே!

தமிழர்மீது ஏற்றப்பட்டுள்ள 'மூட்டைகள்' வாழ்வை, வளைத்து விட்டன! ஆரியம்—புராணம்...ஜாதி—வடநாட்டு முதலாளித்துவம் முதலிய பல உள. இவைகளைச் சுமந்து சுமந்து தமிழர் வாழ்வு வளைந்து கிடக்கிறது.

வெள்ளை ஏகாதிபத்யம், இந்தியப் பூபாகத்தைவிட்டு விடுகிறது—விடுதலை கிடைக்கிறது!

தமிழரை, ஆரியம் விட்டுவிடுமா? விடுதலை கிடைக்குமா?

விடுதலை பெறுவதற்கான முயற்சி எடுக்கும் வீரர்கள் இல்லையா?

ஒட்டகம், சுமக்கும் பல மூட்டைகளிலே, மேலே ஒரே ஒரு மூட்டையை எடுத்தானதும், பாரம் குறைந்துவிட்ட

தென்று எண்ணி, படுத்திருக்கும் நிலைவிட்டு எழுந்து நடக்குமாம்! பாபம்! அது அறியாது, மூட்டைகள் பலமுதுகிலே இருப்பதை!

தமிழரே! ஒரு மூட்டை, வெள்ளை ஏகாதிபத்யம் கீழே தள்ளப்பட்டு விடும் என்றார்கள் 1948-ல்!

போதுமா? நமது வாழ்வை நெரிக்கும் மற்ற மூட்டைகளைக் கீழே தள்ளாவிட்டால் வாழ்வு இல்லை! வாழ்வுக்காக—விடுதலைக்காகப்—பணிபுரிய முன்வாருங்கள்—வெற்றி நமக்கே, அஞ்சேல்!

கடைசி வைசிராயாக வருகிற மவுண்ட்பேடன் பிரபு, இரண்டு வேலைத்திட்டங்களைக் கொண்டு வருகிறாராம். காங்கிரசும் லீகும் சமரசமாகி விட்டால், எவ்விதமாக அதிகாரத்தை மாற்றுவது என்பதற்கு ஒரு திட்டமாம்! மற்றொரு திட்டம், இரு கட்சிகளும் கடைசிவரை வழிக்கு வராமலே போகுமானல், பிரிட்டிஷார் எவ்விதமாக நடந்து கொள்வது என்பதற்காக ஒரு திட்டமாம்!

அந்த லாரன்சுக்கு அழைப்பா!

இந்த இரண்டாவது திட்டமிருக்கிறதே, அதனைத் தேவை யற்றதாக்கினுலொழிய, நாடு முன்னேற வழி ஏற்படாது. இருகட்சிகளிலும், எப்பக்கம் பிரிட்டிஷ் பலம் சேரும் என்ற ஆருடம் பார்க்கும் அளவுக்கு, நாட்டு நிலைமை கெட்டுவருகிறது! எந்தப்பக்கம் சேர்ந்தால், தனக்கு இலாபம் என்ற கணக்கைக் கவனிக்காமலா, பிரிட்டன் வேலை செய்யும்! இப்போது யோசித்தால் விளங்கும், இன்றைய லாரன்சுகள் நாட்களிலே எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கையை நன்கு ஆராய்ந்தால், அது, பழைய லாரன்சு உள் நாட்டுச் சண்டையிலே நுழைந்து, ஊராளும் உரிமையைப் பெற்ற ஸ்ட்ரிங்கர் லாரன்சின் போக்குக்கு வழி செய்வதாக இருப்பது!

இதைத் தடுத்தாகவேண்டும்...தடுக்கமுடியும்—

வடநாட்டுச் சூழ் நிலையில், இதற்குத் தெளிவு பிறக்க வழி இல்லை.

உலகிலே உள்ள முஸ்லீம் நாடுகளின் தொடர்பை உத்தேசித்தேனும், நம்மைத்தான் பிரிட்டன் ஆதரித்தாகவேண்டும் என்று லீக் எண்ணக்கூடும். அதுபோலவே, ஓங்கி வளர்ந்துள்ள வியாபார பொருளாதார பலத்தையும் கூட்டுகளையும் கவனித்து, நம்மைத்தான் பிரிட்டன் ஆதரிக்கும் என்று காங்கிரஸ் கருதக்கூடும். எந்தக் கட்சியின் திட்டத்தைப் பிரிட்டன் ஆதரிப்பதானாலும், அதன் விளைவு என்ன ஆகும்? பழயபடி பிரிட்டிஷ் பிடி! எந்தக் கட்சியும் வேண்டாம்-உள்நாட்டுத் தகராறுகளை நீங்களே தீர்த்துக் கொள்ளும் என்று பிரிட்டன் இருந்துவிடுமேயானால், என்ன ஆகும்? சீனாவின் நிலைமை! சீரழிவு !!

திராவிடம் ஏன் தேயவேண்டும் ?

திராவிடம், ஏன் தனக்குச் சம்பந்தமும் அவசியமும் இல்லாததும், கேடு தரக்கூடியதுமான தொடர்பு கொண்டு, தேயவேண்டும் ? காங்கிரசிலுள்ள திராவிடத் தோழர்கள், இது பற்றித்தான் மிக மிக ஊன்றிக் கவனிக்கவேண்டும். நாட்டின் எதிர்காலம் வளமுடையதாக இருக்க வேண்டுமானால், நாம் நமது போக்கை இப்போதே தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்.

கர்சான்—கார்சான்!

கர்சான் ஒழிக! கார்சான் ஒழிக!

பிளவுபடுத்தும் பேயர்கள் ஒழிக!

வங்கத் தாயை வெட்டவிடோம்! பரங்கியின் திட்டம் பலிக்கவிடோம்!

அயர் மாதை வெட்டவிடோம்! அக்ரமக் கார்சானை வெல்ல விடோம்

இவ்வண்ணம் முழக்கமிட்டனர்—தேசியத்தால் உந்தப் பட்டவர்கள்—ஒரு காலத்தில்.

தேசீயத்தின் பேரால் கிளப்பப்பட்ட தீச்சுழலில் சிக்கின வர்கள், கர்சான், கார்சான், இருவரும்.

கர்சான், இந்திய உபகண்டத்துக்கு வைஸ்ராய். இவர், நிர்வாக வசதியைக் கருதி, வங்காளத்தை இரண்டு மாகா ணங்களாக்க வேண்டுமென்ற திட்டம் தீட்டியவர். அதனால் வெகுண்டு, வங்காளி இயக்கம்—வந்தே மாதர இயக்கம்—சுதேசி இயக்கம்—காங்கிரஸ் இயக்கம்—என்ற முறையில், மக்கள் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றவர்,

கார்சான், அயர்லாந்தில், ஒரு பகுதியை—அல்ஸ்டர் எனும் பகுதியைத்—தனி அரசு அமைக்கும் திட்டம் கொண்டவர்.

அயர்லாந்தில் 'தேச பக்தர்கள்', கார்சானைக் கண்டித்தனர். இந்தியாவில் தேசபக்தர்கள், கர்சானைக் கண்டித்தனர்,

கர்சானின் திட்டம் அப்போது வெற்றி பெறவில்லை. கார்சானின் திட்டம், அயர்லாந்துப் பிரிவினை, அல்ஸ்டர் தனி அரசு அமைக்கும் திட்டம், அப்போதே வெற்றி பெற்றது.

இப்போது கர்சான், பழி தீர்த்துக்கொண்டார். எந்த வங்கப் பிரிவினைத் திட்டத்தை எதிர்த்து ஒழித்தனரோ, அதே பிரிவினைத் திட்டத்தை, இன்று காங்கிரசார் அமுலுக்குக் கொண்டுவந்தாக வேண்டும் என்று முனைகின்றனர்.

கார்சான், அல்ஸ்டர் கேட்டுப் பெற்றதுபோல, இங்கு பாகிஸ்தான் கேட்கப்படுகிறது—மறுக்கப்பட்டது—ஆனால் உருவாகிக்கொண்டே வருகிறது.

கர்சான்—கார்சான் இருவருக்கும், இன்று இங்குச் செல்வாக்குக் கிடைத்துவிட்டது—அவர்கள் மறைந்த பல வருஷங்களுக்குப் பிறகு!!

வங்காள பாபுவின் செவியில் இன்று அவருடைய பேரன் பேசும், 'வங்கம் இரண்டாக்கும் திட்டம்' வீழ்கிறது. கர்சானின் கல்லுருவம்கூடக் கேலியாகச் சிரிக்கும். இந்த நிலைமையைக் கண்டு!

சிதைந்த சாம்ராஜ்யம், வீழ்ந்துகொண்டே இருந்த வல்லரசுகள், சிக்கல்கூடான சமஸ்தானங்கள், ஆகியவற்றினுக்கிடையே புகுந்த ஆங்கிலருக்கு, நாட்டை ஆளும் நிலை ஏற்பட்டது. பல பகுதிகளிலே ராணுவம் அவர்களுக்கு வெற்றி தேடிக் கொடுத்தது என்ற போதிலும், ராஜதந்திரமே பெரிய காரணம், பிரிட்டிஷார் இங்கு நிலைத்ததற்கு. பிரிட்டிஷார் அப்படியொன்றும் உலகிலேயே முதல் தரமான அசகாய சூரர்களல்ல; இந்திய உபகண்டத்திலே—

பல்வேறு பகுதிகளிலே இருந்த மக்களும், கோழைகளல்ல! கன்னியரின் கடைக்கண் வீச்சிஞல் ஆடவர் வீழ்ந்ததுண்டு என்ற காவியச் சுவை மட்டுமல்ல, கன்னியரின் வாள் வீச்சின் திறத்தைக்கண்டு இங்குக் களம்பல ஆச்சரியப்பட்டதுண்டு. ஆற்றலற்றவர்களே அல்ல, ஆங்கிலர் அடக்கியது. நமது பூபாகத்தை, வீரர்களிடம் இழந்துவிடவில்லை. நமது வீண் தகராறுகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட தந்திரக்காரர்களிடம் இழந்துவிட்டோம். அந்தச் சமயத்திலே வெள்ளையரிடம் இன்று இருப்பதுபோல, நவீன யுத்த தளவாடங்கள் கூடக் கிடையாது. கொக்கு சுட, இன்று உபயோகமாகும் துப்பாக்கியே வைத்திருந்தனர்! இட்சுவாகு வம்சம்—இரவி குலம், ரணபத்ரகாளி வம்சம், வீரவாகு வம்சம், பாலர், சேனர், கடம்பர், ராஷ்டிரகூடர், ரஜபுத்ரர், மராட்டியர், மொகலாயர், சீக்கியர் என்ற பல்வேறு விருதுகள் பெற்றவர்களெல்லாம், 'கொக்கு சுடும் துப்பாக்கி' தூக்கியவர்களின் முன்பு, தாக்குப் பிடிக்க முடியாது போய்விட்டது. என்ன செய்வது! வெடிமருந்தின் மீது தண்ணீர் ஊற்றி விட்டால், பலன் இராதே! வீரம், வீணரின் கூட்டுறவால் மங்கிப்போயிருந்தவேளை! ஆகவே தான் ஆங்கிலர், கூடாரமடித்தவர்கள், பின்னர்க் கொலு வீற்றிருக்கும் நிலைபெற்றனர்.

பல்வேறு சிதறுண்ட அரசுகளை அவர்கள் திருத்தி அமைக்கவும், ஒட்டவும், வெட்டவும், உருக்கி வார்க்கவும், வேண்டிய அவசியம் நேரிட்டது. அவர்கள் துவக்கத்திலே, சென்னை, பம்பாய், கல்கத்தா என்ற துறைமுகப் பகுதிகளில் தங்கினர். பிறகு, அங்கெல்லாம் அரசுகள் அமைத்தனர். அமைக்கும் போது இனம், மொழி, கலாசாரம் இவைகளைக் கவனித்து, மாகாணங்களை அமைக்கவில்லை. அவர்களுக்கு ஏன் இருக்கப் போகிறது இந்த அக்கரை! நிர்வாகம், அதிலும் குறிப்பாக ராணுவ நடவடிக்கைக்கு ஏற்ற நிர்வாகம், ஒழுங்காக இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்குடனேயே, பல பகுதிகளை 'நிர்வாக அமைப்புகள்' ஆக்கினர். அவ்வப்பொழுது

தோன்றிய சிக்கல்களுக்கு ஏற்றபடியும் நிலைமைகளுக்குத் தக்கபடியும், அமைப்புகளை மாற்றிக்கொண்டும் வந்தனர். இன்னமும் அந்தக்காரியம் முடிவடையவுமில்லை.

நமது நாட்டிலேயே, பல மாறுதல்களைக் கண்டோம் — நினைவிலே கொண்டுவரவேண்டிய விஷயங்கள் அவை முதியோர்களாக உள்ள காங்கிரஸ் வாதிகளுக்குத் தெரிந்திருக்கும், இந்தியாவை ஒரே தேசம் என்ற கருத்துடன் நோக்கி வந்தபோது, தேசத்தைத் தேவியாக உருவகப்படுத்திப் படம் வெளியிட்டார்களே அந்தச் சம்பவம் பழய படம் கூட எங்காவது கிடைக்கக்கூடும். அதிலே பார்த்தால் தெரியும், பர்மா தேவியின் சேலை முன்தானையாக இருக்கும்! இன்று? முன்தானை இல்லை; பர்மா பிரிக்கப்பட்டது—தனி அரசு ஆக்கப்பட்டது. பர்மா பர்மியருக்கே என்ற முழக்கம், சரியாக ஒரு பத்துவருஷகாலம் கூடக் கேட்கவில்லை அதற்குள், தனி உரிமையைப் பர்மியர்கள் பெற்றுவிட்டனர். தேவியின்சேலைக்கு முன்தானை போன்று சித்திரம் தீட்டி, சிந்துபாடியவர்களேகூட, இன்று பர்மா தனி அரசாகிவிட்டதைக் கண்டு, சரி! அவர்கள் இஷ்டம் என்று தான் இருந்துவிட்டனர். பர்மாவைப் பிரிக்கலாமா? என்று கோபமாகப் பேசினர் முதலில்! பர்மாவைப் பிரிக்க விடோம்! என்று ரோஷமாகப்பேசினர் பிறகு. பர்மா பிரியத்தான் வேண்டுமா என்று சோகத்துடன் பேசினர் பின்னர், பிரிந்தே விட்டது பர்மா, என்று கண்ணீருடன் நின்று கூறினர். இப்படிச் 'சுருதி' படிப் படியாக மாறிக் கொண்டே வந்தது. நடந்தது நடந்தாகிவிட்டது என்ற உடனே, மீண்டும், 'சுருதி' மாறத் தொடங்கிற்று, 'பிரிந்தாலும், பர்மா சுகமாக வாழட்டும் என்பதே எம் ஆசை' — 'பிரிந்தால் என்ன, மறவோம்' — 'பிரிந்தாலும் பிரியத்தை இழந்தோமில்லை' — 'பர்மா நமது சகாதோழன் — உறவினன்' — 'பர்மாவின் சுகதுக்கத்திலே நமக்கு இல்லாத அக்கரை, வேறுயாருக்கு இருக்கமுடியும்' என்று சுருதிமாறிவிட்டது. இன்று அவுங்சான் — நேரு ஆலிங்கனம் என்று பத்திரிகையில் பூரிப்புடன் எழுதும் அளவு, நிலைமை மாறிவிட்டது — தேசம் நிலைத்து விட்டது.

இந்தப் பர்மா, இந்தியாவுடன், ஒரு பகுதியாகவே இருந்தது.

பர்மா தனித் தேசமாகும் என்று எண்ணுவதே, தேசத் துரோகியின் வேலை என்று பேசப்பட்ட காலம் ஒன்று இருந்தது.

பிரிந்த பர்மா, நமக்குப் பாடம் கற்பிக்க முடியும், கருத்துடன் அதன் வரலாற்றைக் கவனித்தால்.

1937-ம் ஆண்டுவரை இந்தியாவுடன் இணைந்தே இருந்த பர்மா, தனி நாடாகிவிட்டது. கேடுநேரிட்டதாகத் தெரியவில்லை. வணிக வேந்தர்களுக்கு வேண்டுமானால், வேட்டைக் காடு குறைந்தது – மக்களுக்குக் குறை நேரிட்டுவிடவில்லை. நேசமும், உறவும் ஏற்படாதபடியும் ஆகிவிடவில்லை.

'பிரியவே கூடாது — பிரிந்தால் விரோதிகளாகிவிட வேண்டும்' என்று எண்ணுவது பெருமதியுமல்ல. அரசியலில் நடைமுறை உண்மையுமல்ல. பிரியவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்ட பிறகும், நிர்ப்பந்தப்படுத்தி இணைத்து வைப்பதுதான், பேராபத்து—துவேஷம் வளர்க்கும் வழி—நமது பின் சந்ததிக்கு, நாம் நமது பிடிவாத குணத்தினால் வைத்து விட்டுப்போகும் விஷப்பாண்டமாகும், அத்தகைய நாடு.

பர்மாவின் மொத்த ஜனத் தொகை 1,70,00,000 இரண்டு கோடிக்கும் குறைவான மக்கள் கொண்ட பர்மா, தனிநாடு! எப்போது முதல்? 1937-ம் ஆண்டு முதல்!

ஆங்கிலர், இந்தியப் பூபாகத்திலே புகுந்து கொண்டு செய்துவந்த வெட்டு ஒட்டு வேலைகளிலே, பர்மா வேலையும் ஒன்று. படிப்படியாக, பர்மாவில் பிரிட்டிஷ் கை ஓங்கிற்று. 1826-ல், பர்மா, இந்தியாவுடன் இணைக்கப்பட்டுவிட்டது. டெல்லி சர்க்காரின் கீழ், பர்மா கொண்டு வரப்பட்டது. 1826-ம் ஆண்டிலிருந்து 1937 வரை, 110 வருஷங்கள், பர்மா 'இந்திய சர்க்காரால்' ஆளப்பட்டு வந்தது. இங்கு

யாரும் இதனை அவசியமற்றதென்றோ, அநீதியானதென்றோ கருதவில்லை. **பர்மாவும் பாரத்வர்ஷத்திலே ஒரு பகுதிதான்** என்று பூரித்தனர். இதுகூட ஆச்சரியமல்ல ; பர்மாவில்கூட யாருக்கும், தனி அரசுபோய் இந்தியாவுடன் சேர்க்கப்பட்டு விட்டோமே என்ற எண்ணம் எழவில்லை ! 1937-ல், பர்மா பிரிந்தேவிட்டது ! இன்று, பழயபடி அவர்கள் பர்மாக்காரர் ஆகிவிட்டனர் ! படத்தின்படி பேச வேண்டுமானல், தேவிக்குச் சேலையின் முன்தானை இல்லை ! முன்தானைத் துண்டு, அவுங்சானிடம் இருக்கிறது. அது கண்டு பண்டித நேருவுக்குக் கோபம் ஏற்படவில்லை. இருவரும் சிறந்த நண்பர்கள் !

பர்மா இந்திய சர்க்காரில் ஒரு மாகாணமாக இருந்தது போலவே, அகில இந்தியக் காங்கிரசிலேயும் பர்மா இடம் பெற்றிருந்தது. இப்போது ஒவ்வொரு மாகாணத்துக்கும் காங்கிரஸ் கமிட்டி இருப்பதுபோலவே, பர்மா மாகாணக் காங்கிரஸ் கமிட்டியும் இருந்தது. இன்று எல்லைக் காந்தியைக் காணும்போது மற்றப் பகுதிகளில் உள்ள காங்கிரசார் எவ்வண்ணம் ஆர்வத்துடன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்களோ அதேபோல அந்த நாட்களில், பர்மாவிலிருந்து வரும் தலைவர்களுக்கு மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. பர்மாவிலிருக்கும் பௌத்த பிக்ஷுக்கள், காங்கிரஸ் இயக்கத்திலே தீவிரப் பணியாற்றினர்—சிறை சென்றனர். **பர்மா உத்தமர்** என்று பல பிரபலமான தலைவர்கள் பணியாற்றினர். காங்கிரசிலுள்ள பெரியவர்களுக்கு நினைவிலிருக்கும். இவ்வளவு ' அன்யோன்யம் '—காங்கிரசின் பேரால் இருந்தது. பர்மாக் காங்கிரசும், அதன் தலைமைக் கழகமான அகில இந்தியக் காங்கிரசும், பர்மா பிரியக்கூடாது – பாரத் வர்ஷத்தைத் துண்டாடக்கூடாது—இது பிரிட்டிஷ் சூழ்ச்சி—இதற்கு நாம் பலியாகக்கூடாது என்றுதான் கிளர்ச்சி செய்தன. பிறகோ, படிப்படியாக, பர்மா இந்தியாவுடன் இணைந்திருப்பது பர்மாவின் செல்வத்தை அரிக்கும் சூழ்ச்சி என்று பேசப்பட்டு பர்மாவிலே யாரார் காங்கிரசை ஆதரித்தார்களோ,

அவர்களே பர்மா பர்மியருக்குத்தான், இதுதான் உண்மையான தேசியம் என்று பேசி, பிரிவினையை ஆதரிக்கலாயினர். பர்மா பிரிந்துவிட்டது. அகில இந்தியக் காங்கிரஸ், இப்போது மீண்டும் பர்மாவை இந்தியாவுடன் இணைக்கவேண்டுமென்று கூறுவதில்லை. அந்த எண்ணமும் கிடையாது

பல மாகாணங்களின் வரலாறுகளை எடுத்துக்கொண்டால்கூட, இந்த வெட்டு ஒட்டு, வேலை புதிதுமல்ல; கேட்டதும் குலை நடுக்கம் கொடுக்கக்கூடியதுமல்ல என்பது விளங்கும் புதிய திட்டப்படி, எல்லைப்புற மாகாணமும் பஞ்சாபும சிந்துவும் சேர்ந்து, B-பிரிவு ஆகிறதல்லவா? இதற்கு எல்லைக் காந்தி என்ன சொல்கிறார்? ஆஹா பஞ்சாபின் ஆதிக்கத்தின் கீழ் எல்லை இருப்பதா? என்ன அக்ரமம் இது? எனது வீரப் பட்டாணியர்கள் இதனை விரும்பவேமாட்டார்கள் என்றல்லவா கூறுகிறார். பட்டாணியர்களின் உண்மையான விருப்பம், எல்லைக் காந்தி சொல்கிறபடி இருக்கிறதா என்றால், அதற்கான அறிகுறி காணோம். கிடைக்கும் அறிகுறி, இதற்கு நேர்மாறாக இருக்கிறது. கும்பல் கும்பலாகப் பட்டாணியர்கள், பாஞ்சாலப் பகுதிக்கு "படை எடுக்கிறார்கள்" — ஏன்? — அந்தப் பகுதியிலுள்ள இஸ்லாமியருக்குத் துணை புரிய — என்று தேசியப் பத்திரிகைகளிலேயே 'சேதி' வருகிறது! எல்லைக்காந்தி பதறுகிறார், பஞ்சாபும் எல்லையும் இணைக்கப்படுவதா என்று. அது கேட்டு, இங்குள்ள தேசியத் தோழர்கள்கூடத்தான் பதறுகிறார்கள். ஆனால், இதோ சிறிதளவு வரலாறு; கவனிக்கவேண்டுகிறோம். பிரிட்டிஷாரின் "வெட்டு ஒட்டு" முறையினால், 1901-ம் ஆண்டுவரையில், பஞ்சாபும் எல்லைப்புறமும் சேர்ந்து ஒரே மாகாணமாகவேதான் இருந்தன. கர்சான்தான் ராணுவ வசதியை எண்ணி, எல்லைப்புறத்தைத் தனி மாகாணமாக்கினார். அது மட்டுமல்ல! ரயில்வே லையனில் தனியாக விடப்பட்டுள்ள சம்பார்ட்மெண்டுகளை, ஒவ்வொரு சமயம் ஒவ்வோர் என்ஜினுடன் தொடர்பாக்குவது போல—அங்ஙனம் தொடர்பு

படுத்தப்பட்டதும் என்ஜின் எந்தத் திக்கு போகிறதோ, எந்தத் திக்குக்குக் கம்பார்ட்மெண்டுகள் செல்கின்றனவோ, அதுபோல—வடநாட்டிலே பல பகுதிகளில், வரலாறு இருக்கக் காணலாம்.

கஜனி, வட இந்தியாவை வென்றபோது, அதனை இந்தியப் பூபாகத்திலிருந்து பிரித்து, தன் ராஜ்யத் தலைநகரான கஜனியிலிருந்து ஆண்டு வந்தான். அப்போது வடநாட்டிலே அவன் வென்ற பகுதி, இன்றைய எல்லைப்புறம் பஞ்சாப் ஆகியவை உள்ளடங்கியதாக இருந்தது. இந்தியப் பூபாகத்துடன் அதுவரை இணைந்திருந்த அந்தப்பகுதி துண்டிக்கப்பட்டு, கஜனியின் ராஜ்யத்துடன் ஒட்டப்பட்டது இந்த ஒட்டு, பிறகு வெட்டப்பட்டது.

மகமத்கோரி, இதே பகுதியை, கஜனிநகரில் இருந்தல்ல, முதலில் லாகூர் நகரிலிருந்தும், பிறகு டில்லி நகரிலிருந்தும் அரசாண்டான். அப்போது இப்பகுதி, இந்தியப் பூபாகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலே இந்தியப் பூபாகம் இருந்த காரணத்தால், இதேபகுதி 1849-முதல் 1901 வரை, ஒரே மாகாணமாக, இந்தியப் பூபாகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

பம்பாயுடன் சில வருஷங்களுக்கு முன்புவரை, சிந்து இணைக்கப் பட்டிருந்தது. அந்தக்காலத்திலே பலமுறை, சிந்துவைப் பாஞ்சாலத்துடன் இணைக்க வேண்டுமென்று முயற்சிகள் செய்யப்பட்டன. இருபகுதிகளும் அக்கம் பக்கம், ஒரே இனமக்களே, இருபகுதிகளிலும் பெருவாரியாக இருந்தனர்—இருக்கின்றனர். பஞ்சாலம்—சிந்து, இரண்டுக்கும் தொடர்பு உண்டாக்கும் இயற்கைச் சக்தியாக ஓர் ஆறும் இருக்கிறது. இவ்வளவு தொடர்புக்கு வசதியான இரு பகுதிகள் கொண்ட இடமும், பலகாலம் ஒரே மாகாணமாக

இருந்த எல்லே பஞ்சாப் பகுதிகளும், பாகிஸ்தான் கொடிக் கீழ் வருவது, ஏன் மறுக்கப்படவேண்டும்!

பிரிட்டிஷார், தங்கள் நிர்வாக சௌகரியத்தைக் கவனித்துச் செய்த பல ஒட்டு வேலைகளைப், பிறகு அதே காரணத்துக்காகவே மாற்றினர்—புதிய அமைப்புகள் ஏற்படுத்தினர். அவர்கள்தான் பர்மாவை இந்தியாவுடன் ஒட்டவைத்தனர். அவசியமற்ற காரியம். அது பிறகு ஆபத்தைத் தந்தது—பிரிட்டிஷாருக்கு அல்ல—நம்மவர்களுக்கு! பர்மாக்காரனின் கத்திக்குத்து. வெள்ளையனுக்கு அல்ல; வெள்ளையஞ் செட்டியார்களுக்குக் கிடைத்தது!! பிறகு எந்தப் பர்மாவை ஒட்டவைத்தார்களோ. அதே பர்மாவை, 1937-ல் வெட்டிவிட்டார்கள் பிரிட்டிஷார்! இடையே சிந்தியது பர்மிய இரத்தம், தமிழர் இரத்தம்!!

ஒரு பொது உண்மை விளங்கும், இத்தகைய பல்வேறு சம்பவங்களைக் கவனித்தால், ஒன்றுபட முடியாத பகுதிகளை ஒன்றுபட்டிருக்கச் செய்யும் நிர்ப்பந்த முறை, நேசத்தை அல்ல, துவேஷத்தைத்தான் மூட்டிவிடும். அந்தத் துவேஷத்தை, நல்லுரை தணியச் செய்யாது. மனிதனுக்குள் உறங்கிக் கிடக்கும் மிருகம், துவேஷம் முற்றுகிறபோது வெளிக்கிளம்பும்! மனிதன், மிருக உணர்ச்சிக்கு அடிமைப்படுகிறான். அதோ நவகாளியில், பீகாரில், பாஞ்சாலத்தில், எல்லையில் பச்சை இரத்தத்தைக் கொட்டுகிறது மனித மிருகம்! பரங்கி பார்க்கிறான்! என்ன எண்ணுவான்?

உடல் நோய் காரணமாக வீங்கி விட்டால், அது உடல் வளர்ச்சியாகுமா? உடலின்மீது 'இரத்தக்கட்டி' புறப்பட்டால், 'புதிதாகச் சதை உருண்டை கிடைத்து விட்டது: மற்றவர்களுக்குக் கிடைக்காதது நமக்குக் கிடைத்தது: எனவே இலாபம்' என்று ஏமாளியல்லவா கருதுவான்! அது போலவே, ஏகாதிபத்தியம் தன்னுடைய சுகவாழ்வுக்காக அமைத்துக்கொண்ட ஏக இந்தியா—மத்யசர்க்கார் மாகாண அமைப்புமுறைகள்—இவைகளெல்லாம் நமக்கு இலாபமுமல்ல, பலமுமாகாது!

ஒன்றுபட முடியாத அளவுக்குப் பாழ்பட்டுப்போன பகுதிகள், நமது பூர்வீகச் சொத்து என்றாலும்கூட அதனை விட்டு விட்டு, உள்ளதை, ஒன்றுபட்டிருப்பதை, ஒன்றுபட்டிருக்கச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை ஊட்டும் இடத்தை, கட்டிக்காத்து, வளப்படுத்தி மக்களுக்கு வாழ்வளிக்கவேண்டும் இந்த அரசியல்யூகம், இதுபோது நமக்கு மிகமிகத் தேவை.

பிரிவினையை மறுத்து இதுவரை செய்யப்பட்ட பிரசாரமும், பிரிவினையை ஆதரித்து இதுவரை செய்யப்பட்ட பிரசாரமும், துவேஷ உணர்ச்சியைத்தான் கிளப்பி இருக்கமுடியும். தத்தமது வீர தீர பராக்கிரமங்கள், முன்னோர்கள் முடிசூடிய மகிமை எதிரியை முறியடித்த திறமை கோட்டை கட்டி கொடிபறக்கவிட்ட கதை இவைகள் மேடைகளிலே முழங்கப்பட்டன. தணல், நெருப்பாகிவிட்டது! எனவேதான், தாங்கமுடியாத அளவு பொதுமக்கள் வடநாட்டிலே கஷ்டப்படவேண்டி இருக்கிறது பர்மா பிரிவினைக்கு, ஓரளவு எதிர்ப்புக் காட்டிப் பிறகு இணங்கி விட்டதுபோல, பாகிஸ்தானுக்கும் செய்திருந்தால், இன்று இந்தக் கலகம் நேரிட்டிராது. அவுங்சான்—நேரு ஆலிங்கனத்தைப்போலவே. ஜின்னா—காந்தி நேசம் ஏற்பட்டிருக்கும். இப்போதும், நிலைமை அடியோடு கெட்டுவிட்டது என்று கைவிட்டு விட வேண்டிய அவசியமில்லை.

அறிந்தோ அறியாமலோ இவ்வளவு அமளிக்கு இடையிலேயும், மூலாதாரப் பிரச்னை தீர்க்கப்பட்டுக்கொண்டு வருகிறது. அதாவது, இப்போது பாகிஸ்தான் தருவதா கூடாதா என்ற பிரச்சினை மாறிவிட்டது. பாகிஸ்தானில் முழுப் பாஞ்சாலமும் இருப்பதா, முழு வங்காளமும் இருப்பதா என்று அளவுபற்றிய தாகிவிட்டது பிரச்சினை.

பாஞ்சாலத்தில், ஒரு பகுதியைத் துண்டாடவேண்டும் என்று, எந்தச் சீக்கியர்களுக்காகக் கூறப்படுகிறதோ, அந்தச் சீக்கியர்கள், இந்தியாவின் மொத்த ஜனத் தொகையில் எவ்

வளவு என்று எண்ணுகிறீர்கள்? 100-ல் ஒரு பாகம்! இந்தச் சிறுபான்மையினரின் நலனுக்கு, ஒரு தனி அரசுரிமை தேவைப்படுகிறது. இந்துவுக்கும் முஸ்லீமுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளின் அளவு கூட, முஸ்லீமுக்கும் சீக்கியருக்கும் இடையே ஏற்படவேண்டிய அவசியமில்லை.

உருவ வணக்கம் இருவருக்கும் கிடையாது.

ஜாதி, குலம், இருவருக்கும் கிடையாது.

ஆனுல் வரலாற்றிலே, அவர்களுக்குள் நடைபெற்ற போர்ச்சம்பவங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

100-க்கு ஓர் ஆள் என்ற அளவுள்ள சீக்கியர்களின் நலனைப் பாதுகாக்க, உரிமையைக் காப்பாற்ற, பாஞ்சாலத்தில் அவர்கள் பெருவாரியாக உள்ள பகுதியைத் தனியாக்கி, அதை இந்துக்கள் வாழும் பகுதியுடன் இணைக்கவேண்டுமென்று கூறப்படுகிறது. இது அவசியமென்று தோன்றும் போது, மொத்த ஜனத்தொகையிலே நூற்றுக்கு முப்பதுக்கு மேல் உள்ள முஸ்லீம்கள், தாங்கள் பெருவாரியாக உள்ள இடங்களில், தங்கள் அரசு நடக்கவேண்டுமென்று கேட்டதிலே என்ன தவறு? ஏன், இரு இனத்துக்கும் இவ்வளவு துவேஷம் ஏறுமளவு பிரிவினையை எதிர்த்தார்கள்?

இவ்வளவு அக்கரையுடன் 100-க்கு ஒருவராக உள்ளவர்களின் உரிமையைப் பாதுகாக்க முனையும்போது, 4 கோடிக்கு மேலுள்ளவர்களும், பிரிட்டிஷ் துப்பாக்கி முனை வருவதற்கு முன்புவரை தனி அரசு நடத்தியவர்களும், மொழி-பண்பாடு ஆகியவற்ருல் மாறுபட்டவர்களும், பண்டைப் பெருமையும் இலக்கியச்சிறப்பும் கொண்டர்களுமான திராவிடப் பெருங்குடி மக்களை மட்டும் ஏன், அனுதைக் குழந்தைகளை ஆஸ்ரமத்தில் சேர்ப்பதுபோல, வடநாட்டுடன் சேர்க்கவேண்டும்? ஏன் வடநாட்டு வாணிபத்துக்கு, திராவிடத்தைத் தத்தம் செய்யவேண்டும் என்று கேட்கிருேம். நமது குரலிலே வலிவில்லாமலிருக்கலாம் – நியாயம் இல்லையா? நேர்மைக்கு

இங்கு இடமே இல்லையா என்று கேட்கிறோம். காங்கிரசில் இருப்பதும், அகில இந்தியத் தொடர்பும் தேவை என்று, இன்று என்ன காரணம் கொண்டு திராவிடத் தோழர்கள் கருதுகிறார்கள் என்று கேட்கிறோம். திராவிடம் திக்கற்ற குழந்தைதானா? தேடுவார் இல்லையா? கூப்பிடுவார் பின்னோடி எடுபிடி வேலை செய்தாகத்தான் வேண்டுமா? இவைகளை எண்ணிப் பார்க்க வேண்டும் காங்கிரசில் உள்ள திராவிடத் தோழர்கள்.

எவ்வளவு சுலபமாக, பஞ்சாபிலிருந்து ஒரு பகுதியைப் பிரிக்கத்தான் வேண்டுமென்று கூறிவிட்டது காங்கிரஸ்! ஏன் திராவிடக் காங்கிரஸ் தோழர்களுக்கு, இந்தத் துணிவு இல்லை?

இனி, பஞ்சாப் பிரிக்கப்படவேண்டும் என்று கூறப்படுவதிலே பொதிந்துள்ள சூட்சமத்தைக் கவனிப்போம்.

பஞ்சாப் மாகாணத்தைப் பிரிப்பதன் மூலம் சீக்கியர்கள், முஸ்லீம் ஆட்சியிலே இல்லாமலிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

பஞ்சாப் மாகாணத்தைப் பிரிப்பதன் மூலம், முஸ்லீம் ஆட்சியிலே இருக்கும் பகுதியின் அளவைக் குறைப்பதுடன், இந்தப் பகுதியை அதிகமாக்கிக் கொள்ளலாம் என்று, இந்துக்கள் கருதுகின்றனர்.

உள்ளூர மறைந்து கொண்டு வேறோர் பிரச்சினை இருக்கிறது. அது வெளிக்குத் தெரிய ஆரம்பிக்கும், பிறகு; அதாவது, பிரிக்கப்படும் பாஞ்சாலத்தில், இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் இடையே என்னவிதமான தொடர்பு இருக்கவேண்டும் என்பது.

பஞ்சாப் பிரிக்கப்படாமல் ஒரே மாகாணமாக இருந்தால், முதல் தாம்பூலம் முஸ்லீம்களுக்கு என்றபோதிலும், இரண்டாம் அளவு சீக்கியர்களுக்குக் கிடைக்கும்; எண்

ணிக்கை, வரலாற்று முக்யத்துவம் இரண்டிலும், முஸ்லீம்களுக்கு அடுத்தபடியில், பஞ்சாபில் சீக்கியர்கள் உள்ளனர்.

பஞ்சாப் பிரிக்கப்பட்டு ஐக்கிய மாகாணத்துடனே, அல்லது A தொகுதியிலோ சேர்க்கப்பட்டால், சீக்கியர்களுக்குக் கிடைக்கக்கூடிய செல்வாக்கு, குறைவாகவே இருக்கும். சீக்கியத் தலைவர்கள் இதனை உணரச் சிலகாலம் பிடிக்கலாம். ஆனல் உணரத்தான் போகிருர்கள்.

பஞ்சாபையும் பிரித்தாக வேண்டும் என்று கேட்பது கண்டு, நாம் இந்தியாவைப் பிரிக்கவேண்டும் என்று கேட்டதனுல் அல்லவா இந்தக் கதி நேரிடுகிறது என்று எண்ணி ஏங்கி, பாகிஸ்தான் கோரிக்கையை லீக் கைவிட்டுவிட வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது காங்கிரசுக்கு என்று கூறப்படுகிறது. அரசியல் யூகம் தெரிந்த லீக் தலைவர்கள், இந்த நிலைமையையும் தங்களுக்குச் சாதகமாகவே உபயோகித்துக் கொள்வார்கள்.

நாட்டைத் துண்டுபோடச் சொல்கிருர்களே லீகர்கள்! என்று பதைத்துக் கேட்டு, உலகிலே லீக்மீது அருவருப்பு ஏற்படும்படி செய்தார்கள் காங்கிரசார் இன்று அந்த அருவருப்பை நீக்கும் காரியம் நடக்கிறது காங்கிரசே அதை முன்னின்று நடத்தி வைக்கிறது! விளைவுபற்றிய கவலையற்று இக்காரியத்தில் இறங்கிவிட்டது!

முஸ்லீம்கள் மட்டுந்தானு பிரிவினை கேட்கிருர்கள்! அவர்களாவது ஒரு பெரிய துணைக் கண்டத்தைப் பிரிக்கச் சொல்கிருர்கள் அது பெரிய பாதகம் என்று பழிக்கப்பட்டது இப்போது காங்கிரசார் ஒரு மாகாணத்தைக்கூட அல்லவா துண்டாடுகிருர்கள் என்று, இனி உலகம் பேசும்.

காங்கிரஸ் கேட்கிறபடி, மாகாணங்களைப் பிரித்து விடுவது, நடக்க முடியாததுமல்ல ; லீகுக்குச் சிறிது நஷ்டம் ஏற்படும் என்றபோதிலும், ராஜதந்திரமறிந்த லீகர்கள்,

இதனை அடியோடு தள்ளிவிடுவார்களென்றும் கூறிவிட முடியாது.

இப்போது பிரச்சினை, பாகிஸ்தான் உண்டா, இல்லையா? என்ற கட்டத்தைக் கடந்து, பாகிஸ்தானின் அளவு அவ்வளவா, இவ்வளவா? என்ற கட்டத்துக்கு வந்துவிட்டது!

அளவு சற்றுக் குறைந்தாலும் சரி; தங்கள் உரிமை இலட்சியத்துக்கு வெற்றி கிடைத்துவிட்டது என்ற எண்ணத்துடன், இனி லீகர்கள் வேலைசெய்வர்

பஞ்சாபில் ஒரு பகுதியை இழப்பதன் மூலம், பஞ்சாபின் பெரும் பகுதியை ஏகபோகமாக ஆளும் சந்தர்ப்பம் லீகுக்குக் கிடைக்கிறது. அவர்களுக்குள்ள மைனாரடி பிரச்சினையின் தொல்லையும் குறைகிறது. ஒரு வகையிலே, இலாபந்தான்.

இதுபோன்றதோர் சமயத்திலே, அரசியல் யூகமுடையவர்கள் எப்படி நடந்துகொண்டனர் என்பதை விளக்க ஒரு வரலாற்று உண்மையை எடுத்துக்காட்டுகிறேம்.

இந்தியாவிலே ஒருபகுதி, பாகிஸ்தானாக வேண்டும் என்பது லீக் திட்டம், பாகிஸ்தானில் ஒரு பகுதி பிரிக்கப்பட்டு, அளவு குறைக்கப்பட வேண்டும் என்பது, காங்கிரசின் இன்றைய திட்டம்.

இதேபோல, அயர்லாந்தில் ஒரு பகுதி அல்ஸ்டர் எனும் தனி அரசாக வேண்டும் என்று, ஓர் இயக்கம் நடந்தது. அதன் தலைவர், சர். எட்வர்டு கார்சான்.

அயர்லாந்தே, சிறியநாடு. அதிலே சுமார் நாலில் ஒரு பாகமாக உள்ள பகுதியைப் பிரித்துத் தனி அரசு ஆக்குவதா! அல்ஸ்டர் கூடாது!!—என்று கார்சானின் திட்டத்தை எதிர்த்தனர்.

எதிர்ப்பு பிரிவினை இயக்கத்தை ஒழித்துவிடவில்லை.

பிறகு, அல்ஸ்டர் பகுதிக்குள்ளாகவே, எதிர்ப்புணர்ச்சியைக் கிளப்பினர். அல்ஸ்டர் 9 மாவட்டங்கள் கொண்டதுண்டு. இந்த மாவட்டங்களிலே மூன்று, அல்ஸ்டர் அரசியலில் இணையமுடியாது என்று எதிர்த்தன.

கார்சானுக்குச் சிந்தனையைக் குழப்பும் பிரச்சினையாகி விட்டது

அல்ஸ்டர் பெறவேண்டுமானுல், மூன்று மாவட்டங்களை இழக்கவேண்டும். மூன்று மாவட்டங்களையும் இழக்கவே கூடாது என்று தீர்மானித்தால், அல்ஸ்டர் தனி அரசு கிடைப்பது, குந்தகப்படும். என்ன செய்வது?

சர். எட்வர்டு கார்சான், இலட்சியத்துக்கும் நடைமுறைக்கும் இடையே ஊசலாடினுர் பிறகு தைரியமான ஓர் முடிவுக்கு வந்தார்—அல்ஸ்டரில் சேரமறுக்கும் மூன்று மாவட்டங்களை இழந்துவிடச் சம்மதித்தார். அல்ஸ்டர் கிடைத்தது. இன்றும் திவேலராவின் தூக்கத்தைக் கெடுப்பது, அல்ஸ்டர் பற்றிய கனவுதான்!

சர் கார்சானுக்கு வந்துற்றதுபோன்ற பிரச்சினை, ஜனுப் ஜின்னுவுக்கு இன்று ஏற்பட்டிருக்கின்றது. ஜனுப் ஜின்னுவின் அரசியல் யூகத்தை, எதிர்க்கட்சியினரும் அறிவர். ஆகவே, என்ன நடை பெறக்கூடும் என்பதை ஒருவாறு உணரலாம்.

அளவில் குறைகிறதோ, அன்றிக் கேட்ட அளவே கிடைக்கிறதோ, எது நடப்பதாஞலும், ஒரே இந்தியா என்பது உருக்குலைந்து விட்டது. இந்நிலையில் நமக்கு, திராவிடத்துக்கு, வடநாட்டுத் தொடர்பு ஏன் என்று கேட்கிறேம்.

MARAIMALAI ADIGAL LIBRARY

A:483
183

திருச்சி

Wrapper Printed by: RAINBOW PRINTERS, Tiruchirapalli-8